
www.padippakam.com

# தென்மொழி



நீள்புகழ்ப் பாவல ரேற்றின்
பணிகள் தொடர் வதற்குச்
சூள் கொண் டெழுந்து வினைக் கள
மாகத் தமிழ்க்களத்தை
ஆள்வினை யாலே யமைத்தற்
கெதிருந் தடை பலவும்
தூள்பட நூறி எழுப்புவம்
மக்கள் துணையுடனே!



## தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 33
ஓலை - 1
தி.பி.2032 சுறவம் ( சனவரி - 2001 )
விலை உரு . 5.00

படிப்பகம்

'இணைப்பு' தமிழ்ச்சிட்டு

www.padippakam.com



## அருட்கொடை யாளர்களே பாவாணர்க்குப் பொருட்கொடை தாருங்கள் !

வகைதிரட்டி, ஆள்திரட்டி, அரசாளும்
வல்லமையால் நம்மைச் சாய்க்கும்
பகைதிரட்டிக் கொண்டுள்ளார் வடநாட்டார்,
இந்தியெனும் கருவி கொண்டே!
புகைதிரட்டி உருச்சமைக்கும் பொய்யாட்டம்
காட்டுகின்றார்! அன்னோர் நாணத்
தொகைதிரட்டித் தாருங்கள் தமிழர்களே,
பாவாணர் தொண்டுக் கின்றே!

நாடகத்துக் கீகின்றீர்; நடுத்தெருவில்
உடல்காட்டிக் கொட்டி யாடும்
ஆடகத்துச் சிறுமகளிர்க் குதவுகின்றீர்!
அருந்தமிழ்வாழ் பசும் பயிர்க்குள்
ஊடகத்து வருகின்ற இந்தியெனும்
காட்டெருமை ஓட்டு தற்கே
பாடகத்த பான்மையினான் பாவாணர்க்
குதவுக பைம் பொன்னெ டுத்தே!

அடியேந்தி நின்றவர்கள் முடியேந்தி
அமர்ந்திருப்பர்; அவர்கள் பாங்கில்
குடியேந்திச் செந்தமிழ்த்தாய் நொடிகின்றாள்;
துவள்கின்றாள்; அவளை மீட்க,
மடியேந்தி, தமிழிளைஞீர், தமிழ்மகளீர்
தெருத்தெருவாய் வீடு வீடாய்ப்
படியேந்திச் சென்றுபொருள் திரட்டிடுவீர்
பாவாணர் மகிழு மாறே!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் - 1963

(1963-ஆம் ஆண்டு பாவாணர் பொருட்கொடைத் திட்டம் தென்மொழியில் அறிவிக்கப் பெற்றது. அதன்வழி அவர்க்கு மூவாயிர உருபாவுக்கு மேல் நன்கொடை திரட்டி அனுப்பப் பெற்றது. அக்கால் தென்மொழியில் பாவலரேறு ஐயா அவர்கள் விடுத்த வேண்டுகோள் பாடல் இது.)

படிப்பகம்

www.padippakam.com



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*(நிறுவனம் தி.பி.1990 (1959)*

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் மூழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

**தென்மொழி**

மொழி — இனம் — நாடு

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி 33 தி.பி. உ0ஙங - சுறவம் (சனவரி - 2001) ஓலை 1

# தழைத்தோங்கும் தரவல் தொழில் நுட்பம்

புயல்போல் அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்துவரும் இக்காலத்தில் கலைச்சொற்களின் தேவைகள் அனைத்து மொழிகளுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்நெருக்கடியைப் பயன்படுத்தி, வேற்றுமொழி ஆளுமை நடைமுறையில் அதிகமாகி வருகின்றது. இவ்வாளுமையினால் தமிழின் பழைய பயன்படுத்தங்கள் வழக்கில் மறைந்து வருகின்றன.

தா - தரு - தரவு

'தரவு' என்ற சொல் 'தா' என்கிற வினைச் சொல்லின் பல்வேறு நல்கைகளில் ஒன்று.

ஆய்வு உலகத்தில் இன்றைக்குப் பயன்படுத்தக்கூடிய DATA என்ற சொல்லுக்குச் சரியான மொழிபெயர்ப்பாகத் 'தரவு' என்கிற சொல் பயன்படுகிறது.

ஆய்விற்கும் செயற்பாட்டிற்கும் எடுத்துக் கொள்வதற்காகத் தொகுக்கப்படும் செய்திக் குறிப்புகள்தாம் 'தரவு'. ஆய்வின் அடிப்படைக்கான இந்தச் செய்திக்கூறுகளுக்குத் 'தரவு' என்ற சொல் பொருத்தமாக உள்ளது.

இதன் அடுத்தக் கட்டமாக இன்றைய ஆய்விற்கும் செயற்பாட்டிற்கும் உதவும் வகையில் தரவுகளை எளிதில் பெறவல்ல நடுவமைப்பு ஒன்று

படிப்பகம்

www.padippakam.com



இணைய வழி அமைக்கப்படுகிறது. இவ் அமைப்பில் தரவுகள் வகைப்படுத்தப் பெற்று தேவையானவர்கள் எவரும் பயன்படுத்திக் கொள்ள எளிமையாகப் படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு காலக்கட்டத்தில் செய்திக்குறிப்புகளுக்குத் 'தகவல்' என்ற அரபிச் சொல்லைப் பயன்படுத்தினர். இப்போது செய்திக்குறிப்புகளின் தொகுப்பான Information என்ற சொல்லுக்கும் 'தகவல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

DATA - *செய்திக்குறிப்பு*

Information - *செய்தித் தொகுப்பு (வகைப்படுத்தப்பட்டது)*

எனக் கொண்டால் இவற்றை வேறுபடுத்த மேலும் ஒரு பின்னொட்டைச் சேர்த்து தரவு-தரவல் என்று பயன்படுத்தலாம் என்றே தோன்றுகிறது.

தரவல் என்கிற சொல் 'தகவல்' என்பதற்கு ஒலியமைப்பிலும் பொருளமைப்பிலும் இணையாக இருக்கும்.

இந்த 'அல்' பின்னொட்டு மிகையாக வந்ததெனினும் இன்றைக்குத் 'தகவல்' என்ற சொல்லிற்குப் பகரமாகப் பயன்படுத்தலாம்.

*தரவல் தொழில்நுட்பம்* (Information Technology)

இன்றைக்குச் செய்தித்தாள்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சொல் இது.

தமிழ்நாட்டு அரசு இன்றைக்கு மற்ற மாநிலங்களை விட அதிகமான நிறுவனங்களை உருவாக்கிவிட்டதாக வெற்றிப்பட்டியலில் காட்டிக் கொள்ளப்பயன்படுவது இந்தத் தரவல் தொழில் நுட்பம்.

அமெரிக்கக் குடியரசுத்தலைவர்கூட இங்கு ஆந்திரத்திலும், தமிழ்நாட்டிலும் இந்தத் தரவல் தொழில் நுட்பம் வளர ஊக்கத்தையும் பொருளாக்கத்தையும் வாரி வழங்கிவிட்டுப் போகிறார்.

இவையெல்லாம் இந்த நாட்டிற்கு வளம்சேர்க்கவா? அமெரிக்கர்களுக்கு என்ன அக்கறை இந்த நாடு வளர வேண்டுமென்று?

நம்மில் கணிப்பொறியே பெரும்பாலார்க்குப் புரியாதது போல அதற்குமேல் இந்தச் சூழ்ச்சியும் பெரும் பாலோர்க்கும் புரியாது உள்ளது. புரிந்தவர்கள் இரண்டகர்களாக ஆகிவிடுகின்றனர்.

இந்தத் தரவல் தொழில்நுட்பம் கணிப்பொறி அறிவியலைச் சார்ந்தது.

மென்பொருள்களில் ஒருவகை பயன்பாட்டு மென்பொருள் (Application Software). இந்தப் பயன்பாட்டு மென்பொருள் உருவாக்கத்தில் தமிழ்நாட்டினர் வல்லுநர்கள். பெரும்பாலும் எந்த மென்பொருளைத் திறந்தாலும். அதை உருவாக்கியவர்களின் பட்டியலில் தமிழ்நாட்டினர் நிரம்பவே உள்ளனர். இவர்களின் அறிவுழைப்பினாலேயே மென்பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், அமெரிக்கர்கள் இவர்களை அறிவுப் பணியாளர்களாக மட்டுமே மதிக்கின்றனர்.

இக்கணிப்பொறி அறிவியலில் மேலோங்கி நிற்கும் இவர்களையும் ஒரு கணிப்பொறியாகவே பார்க்கின்றனர்.

கணிப்பொறி அறிவியல் வளரவேண்டும் என்று நாமும் விரும்புகிறோம். ஆனால் அவ் அறிவியல் இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படவில்லை. ஒரு சிறுதொகைக்குக்கூட அந்த அறிவு விலைக்கு வாங்கப்பட்டு விடுகிறது.

எந்த ஒரு மென்பொருளும் அமெரிக்க நாட்டுப் பயன்படுத்தத்தை முன்னிறுத்தியதாகவே உள்ளது.

அந்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கும் வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் என்னென்ன தேவையோ அதைச்சிந்திப்பதற்கும் நிலைநிறுத்துவதற்கும் கணிப்பொறியறிவியல் தேவைப்படுகிறது. அதை இயக்குவதற்கு இன்னொரு கணிப்பொறி மூளையாகத்தான் நம்நாட்டு மக்கள் பயன்படுகின்றனர்.

அந்நாட்டு வளர்ச்சிக்காக வாழ்க்கை முழுவதும் உழைக்கும் கூலி மூளைகளாகத்தாம் பயிற்றுவிக்கப்படுகின்றனர். தங்களின் ஆக்கத்திறனை (Creativity) முழுவதுமாக இழந்து கொண்டு வருகின்றனர்.

தனக்காகச் சிந்திப்பது என்கிற நிலையை இழந்து எந்திரமாந்தனாக மாற்றப்பட்டு வருகின்றனர். அக்கம்பக்கம் உள்ள தம் மக்களிடம் பழகும் தன்மையைக் கூட இன்றையக் கணிப் பொறியாளர் இழந்து, கண்ணுக்குக் கண்ணாடி அணிந்து உடல்வளம்குன்றி நடமாடும் கணிப்பொறிகளாக வளர்ந்து செல்கின்றனர்.

ஆங்கிலேயரிடத்து எழுத்தர் (குமஸ்தா) கல்விகற்று அடிமையாயிருந்த நிலை போய் அதற்கும் மேலாக இன்று அமெரிக்கருக்குக் கணிப்பொறி இயக்கிகளாக வாழ்கின்றனர்.

இவர்களுக்கென்று ஒரு மரபு அறிவு, கலைப்பண்பாடு இருக்கிறது என்கிறதெல்லாம் எப்போதோ மறந்து விட்டது.

கல்வி என்றாலே கணிப்பொறி அறிவியல்தான் இன்றையக் கடிவாளம். அதையும்கூட எல்லைப்படுத்தி திசைதிருப்ப ஏற்பட்ட சூழ்ச்சியே தரவல் தொழில் நுட்பக் கல்வி. அவர்களின் தேவைக்கேற்ப செய்திகளை வகை செய்து தருவதே தரவல் தொழில் நுட்பம். அந்தக் கல்விக்குச் சொந்த மரபு அறிவு, தாய்மொழிக்கல்வி இவையெல்லாம் எதற்கு ?

எவ்வளவுதான் கூலி பெற்றாலும் பல வளமனைகளை உருவாக்கிய கட்டிடத் தொழிலாளி ஒருவர் ஒரு நாளும் தனக்காக ஒரு வளமனையை உருவாக்கி வாழ்ந்து விடமுடியாது.

-மா.பூங்குன்றன்

படிப்பகம்

www.padippakam.com

# மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு:
## தென்மொழி அவையம் கலந்துரையாடல்!



தி.பி. 2032 சிலை 9 (24.12.2000) ஞாயிறு அன்று காலை 10 மணியளவில் சென்னை — மேடவாக்கம் — பாவலரேறு தமிழ்க்கள வளாகத்தில் — தென்மொழி அவையத்தின் சார்பில், மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு விழாத் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி, தென்மொழி ஆசிரியரும் — பாவலரேறு அறக்கட்டளை நிறுவனருமான திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்திருந்த தென்மொழி அன்பர்கள் கலந்து கொண்டனர்.

தென்மொழி அவைய ஒருங்கிணைப்பாளர் புலவர் திரு. இறைக்குருவனார் பாவாணர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்புற நடத்துவதின் இன்றியமையாமை குறித்து விளக்கிப் பேசினார். வருகை தந்திருந்த அன்பர்களும் கருத்துத் தெரிவித்தனர். இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் வருமாறு:

1. மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் நிறைவுபெற இருப்பதை யொட்டி, தி.பி. 2033-ஆம் ஆண்டைப் (கி.பி. 2001) பாவாணர் நூற்றாண்டாகக் கொண்டாடுவதெனத் தென்மொழி அவையம் தீர்மானிக்கிறது.

2. பாவாணர் நூற்றாண்டு விழாவைத் தமிழ்கூறு நல்லுலகெங்கும் உள்ள தமிழ் அமைப்புகளும் — பொதுநல அமைப்புகளும் ஒல்லும் வகையிலெல்லாம் கொண்டாடுமாறு அவையம் வேண்டுகிறது.

3. பாவாணர் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாட்டரசு சிறப்புறக் கொண்டாட ஆவன செய்யுமாறும், பாவாணர் நூல்கள் அனைத்தையும் செம்பதிப்பாக வெளியிட்டு மலிவு விலையில் மக்களிடையே பரப்ப ஆவன செய்யுமாறும் தமிழக அரசை இவ் அவையம் கோருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



4. பாவாணர் நூல்களை — கட்டுரைகளை மாணவர்களுக்குப் பாடமாக வைக்க ஆவன செய்யுமாறு தமிழ்நாட்டரசினையும், பல்கலைக் கழகங்களையும் இவ் அவையம் வேண்டுகிறது.

மேலும் இது தொடர்பான கோரிக்கைகள் வருமாறு:

5. பாவாணர் பெரிதும் வலியுறுத்திய குமரிக் கண்டம் பற்றிய ஆராய்ச்சிக்கென, அரசு பாவாணர் பெயரில் இருக்கை ஒன்றை நிறுவி முறையான செயறபாடுகள் முடுக்கி விடப்படுதல் வேண்டும்.

6. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு, 'மொழிஞாயிறு பாவாணர் பல்கலைக் கழகம்' எனப் பெயர் சூட்ட வேண்டும்.

7. தமிழையும் தமிழரையும் இழிவுபடுத்துவதும், எண்வகைப்பட்ட வழுக்கள் மலிந்தது எனப் பாவாணரால் மெய்ப்பிக்கப்பட்டது மான சென்னைப் பல்கலைக் கழகப் பேரகரமுதலியைத் திருத்தி வெளியிடுவிக்க வேண்டும். அல்லது அவ்வகர முதலியைத் தடை செய்வதோடு செம்மையான தமிழ்ப் பேரகர் முதலியொன்றை உருவாக்க வேண்டும்.

8. உலகின் முதற் செம்மொழி(Primary Classical Language) தமிழே என்பது பாவாணர் கண்ட தெளிவான முடிபு. ஆதலால் தமிழ்நாட்டரசே தமிழைச் செம்மொழியாக அறிவித்து உலக அரங்கில் பரப்புதல் வேண்டும்.

9. தமிழ்நாட்டிலும் பிற நாடுகளிலும் வாய்ப்புள்ள பிற பல்கலைக் கழகங்களில் பாவாணர் பெயரில் அறக் கட்டளைகளை நிறுவித் தொடர்ந்து பாவாணரின் கோட்பாடுகள் - பணிகள் குறித்து ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஆவன செய்தல் வேண்டும்.

10. பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் உள்ள தமிழ்த் துறைகளிலும், நூல்நிலையங்களிலும், பள்ளிகளிலும் நூற்றாண்டு விழா நாயகர் பாவாணரின் படம் பெரிய அளவினதாக இடம் பெறச் செய்தல் வேண்டும்.

11. பாவாணர் நூற்றாண்டு விழாவை ஓராண்டு முழுவதும் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம் உள்ளிட்ட அனைத்துக் கல்விக் கூடங்கள் தக்கவாறு கொண்டாட அரசு ஆவன செய்தல் வேண்டும்.

12. பாவாணர் வழியைக் கடைப்பிடித்துத் தொடர்ந்து தமிழ்ப்பணி புரிவார்க்குப் 'பாவாணர் விருது' அளித்துப் பாராட்டிச் சிறப்பித்து அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



13. நூற்றாண்டு விழாவை யொட்டிச் சென்னையில் பாவாணர் நினைவு மண்டபம் ஒன்று எழுப்பி அதில் தமிழியல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடை பெறும் அரங்கம் ஒன்றை அமைப்பதோடு மண்டப முன்றிலில் பாவாணர் சிலை ஒன்று நிறுவப்படுதல் வேண்டுமெனவும் இவ் அவையம் தமிழ் நாட்டரசை வேண்டுகிறது.

14. பாவாணர் நூற்றாண்டு விழாவையொட்டிச் சிறப்பு மலர் ஒன்றினை(மலர் பற்றியும் – அதன்குழு பற்றிய விளக்கமும் அடுத்த இதழில் வெளிவரும் வெளியிடுவதெனவும், பாவாணரின் வண்ணப்படம், ஒலிநாடாக்கள் வெளியிடுவதெனவும் வரும் மேழத் திங்களில் சென்னையில் மாபெரும் விழா நிகழ்ச்சி ஒன்றை நடத்துவது எனவும் அவையம் முடிவு செய்கிறது.

15. பாவாணர் பற்றிய படைப்பிலக்கியம் — ஆய்வு நூல் ஆகியவற்றிற்குப் பரிசுத் திட்டம் ஒன்றினை அறிவித்துச் செயற்படுவதென அவையம் முடிவு செய்கிறது. (இப் பரிசுத் திட்டங்கள் குறித்த விளக்கமும் அறிவிப்பும் அடுத்த இதழில் இடம்பெறும்.)

— இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாளர்கள் நடுவை பரமசிவம், முனைவர் தமிழப்பன், இரா. முத்துக்குமாரசாமி, புதுவைத் தமிழமல்லன், தங்க. செங்கதிர், வெற்றிச்செழியன், வீ. இறையழகன், தமிழ்மகிழ்நன், அ.சி. சின்னப்பாத் தமிழர், முத்தமிழ்மணி, செ. பன்னீர்ச்செல்வம் ஆகியோர் தொலைபேசி வழித் தொடர்புகொண்டு கூட்டத்திற்குத் தாம் வரவியலாத சூழலில் இருப்பதாகவும் அவையம் எடுக்கும் முடிபுகளுக்கு உடன்படுவதோடு, ஒல்லும் வகையில் ஒத்துழைக்க அணியமாய் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

மற்றும் பலர் அஞ்சல்வழிக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

- தென்மொழி அவையத்தின் பாவாணர் நூற்றாண்டு விழாத் திட்டங்கள் வெற்றிபெற உறுதுணையாற்றுவேன் என உறுதி கூறுகின்றேன். நாகை மாவட்டத்தில் தமிழ்ச் சான்றோர் பேரவைக் கிளைகளின் சார்பில் நூற்றாண்டு விழாக்கள் நிகழ்வுற ஆவன ஆற்றுவேன். தென்மொழியின் நூற்றாண்டு விழாத் திட்டங்களுக்கு எளியனின் சிறுதுளியை இத்துடன் இணைத்துள்ளேன். என்றும் பாவாணர் – பாவலரேற்றின் நெறியில் மொழிமானம் பேணும் தொண்டன். (உரு. 200 விடுத்துள்ளார்.)

— **தரங்கை. பன்னீர்ச்செல்வன், நாகை மாவட்டம்.**

படிப்பகம்

www.padippakam.com



- தங்கள் முடிவு, செயல் எதுவானாலும் எம் பங்களிப்பு உண்டு. வரும் 7.2.2001 சாத்தனூர் விழாவிற்கு ஏற்பாடு 'தென்மொழி' அவையச் சார்பில் வைக்கலாம் என்று எண்ணியுள்ளேன். அல்லது அடுத்து வரும் காரி அல்லது ஞாயிற்றுக்கிழமையில் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

  — மு. ஆறுமுகம், சாத்தனூர்

- தென்மொழி அவையம், குடும்பம் இன்னபிற ஏனைய நிகழ்ச்சிகட்கும் எங்களது தோளும் துணையும் என்றென்றும் அணியமென உறுதியளிக்கிறேன். பாவாணர் நூற்றாண்டு விழா செயற்பாடுகள் குறித்தும் தென்மொழிவழி அறிக்கை வெளிவரின் யாவர்க்கும் பயனே.

  — இரா. அருமருந்தலைவன், சாத்தனூர்

- மிகப் பெரும் மொழி, இன நலக் காவலராக விளங்கிய மொழிஞாயிறு பாவாணர் அவர்களைப் பாராட்டுவது தமிழ் மொழியையும், இனத்தையும் பாராட்டியதற்கு ஈடாகும். இந்நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகச் செய்ய வேண்டியது நம் போன்றோர் தலையாய கடன்; கடமை. எனவே இக் குழுவில் என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதற்கான அனைத்து நிலைகளிலும் துணைநிற்க அணியமாக உள்ளேன். குழு எடுக்கும் முடிவிற்குப் பெரிய அளவில் இல்லையானாலும், என்னால் முடிந்த வினைப்பாடுகளை ஆற்ற யான் எப்போதும் அணியமாக இருக்கிறேன். பாவாணர், பாவலரேறு போன்றவர்களின் அரிய தொண்டுகள் பயன் தராமல் போய்விடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறேன்.

  — சோ.க. அறிவுடைநம்பி, சோமன்கோட்டை.

- மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டியது நம் கடமையாகும். மடல் உரிய வேளையில் எனக்குக் கிடைக்கவில்லை. முன்கூட்டியே கிடைத்திருந்தால் அங்கு தாம்பரத்தில் என் மகன் மூலம் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்திருப்பேன். இருப்பினும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்து கொள்ளுமாறு செய்கின்றேன்.

  — ஆ.பழ. குமரப்பன், திருச்சி.

- பாவாணரின் நூற்றாண்டு விழாத் தொடக்கம், தமிழ்நெறியின் படி தி.பி. 2032, சுறவம் 26 தி.பி. 2001-2-8, வியாழன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். — கதிர். தமிழ்வாணன், குடந்தை.

- கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளுக்கு எங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

  — வ. வேம்பையன், கல்பாக்கம்.

- பாவாணர் விழா பற்றிய கலந்தாய்வுக் கூட்டத்திற்கு வர இயலா நிலை. முடிவுகளைத் தெரிவியுங்கள். ஆர்வமுடன், ஒத்துழைப்போம்.

  — தமிழேந்தி, அரக்கோணம்.

படிப்பகம்

www.padippakam.com



- முயற்சிகள் வெற்றிபெறவும் உண்மையான தமிழர் தமிழ் மொழி மேம்பாடு வெல்ல, ஒளிர உடனிருப்பேன்; உதவுவேன்! — எழுஞாயிறு, சேலம்.
- தென்மொழியே பாவாணர் மொழிஞாயிறு என்பதை அடையாளம் காட்டிய முதன்மையானது முகாமையானது. பாவாணரை அறிமுகப்படுத்தி அடையாளம் காட்டியதோடு இல்லாமல் அவர் பணி சிறக்க துணைநின்றது. தென்மொழி இல்லாமல் பாவாணர் நூற்றாண்டு விழாவிற்கு மதிப்பில்லை. பாவலரேறு தமிழ்க் கள வளாகத்தில் நடப்பது மிக மகிழ்ச்சி. பாவாணரும் பாவலரேறும் உயிர்மெய்யாய் இருந்து தமிழாய்தம் ஏந்தி தமிழ்மொழி, இனப் பகையை சாய்த்தவர்கள், மாய்த்தவர்கள். நன்முயற்சிக்கு என்றும் துணை நிற்பேன். — தமிழ்நெஞ்சன், புதுவை.
- தமிழகத்தின் இன்றைய தேசிய இன உரிமைப் போருக்கான அடிப்படையான — ஆய்வுக் களத்தை அமைத்துக் கொடுத்த அப் பெருந்தகைக்கு, ஆரியப் பார்ப்பனிய அரசிடம் முழுமையாகவே தமிழக மக்களையும் நாட்டையும் அடகு வைத்துவிட்ட திராவிட அரசு 'நூற்றாண்டு விழா' எடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி எடுத்தாலும், தன்னுடைய விளம்பர நோக்கத்திற்காகவே அதைச் செய்யும். 'தென்மொழி' வாயிலாகவே அவரின் ஆய்வுக் கருத்துக்களும் அருந்தமிழ்த் தொண்டும் தமிழகச் சிந்தனையாளர்கள் சிலருக்குப் பரவியது. 'தென்மொழி அவையம்' எடுக்கும் முடிவிற்கு என்னால் முடிந்த அளவிற்கு பங்கு கொள்ளவும் உறுதுணையாகவும் இருப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். — க. கண்ணன், கரடிப்பட்டி

*

## பாவலரேறு தமிழ்க்களத்திற்குப் பலகணிகள் நன்கொடை

நீண்ட காலத் தென்மொழி அன்பரும், பாவலரேறு ஐயா அவர்கள்பால் மிகுந்த ஈடுபாடுகொண்டவரும், தென்மொழித் தொடர்பான நன்முயற்சிகள் பலவற்றுக்கும் ஒல்லும் வகையில் துணைநிற்பவருமான ஈரோடைப் **பாவேந்தர் இராமலிங்கம்** அவர்கள், பாவலரேறு தமிழ்க்களக் கட்டுமானத்துக்குத் தேவையான பன்னிரண்டு பலகணிகள், நான்கு நிலைகதவுகள் உள்ளிட்ட இரும்புப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— தாமரை பெருஞ்சித்திரனார்,
நிறுவனர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை

படிப்பகம்

www.padippakam.com

# விடுதலை உணர்வுக்கு எதிரான 'விடுதலை' ஆசிரியர்

—தமிழரசு—

கடந்த 20.12.2000 அன்றைய் தினமணியில் வெளியாகியிருந்த, திராவிடர் கழகப் பொதுச் செயலரும், 'விடுதலை' இதழின் ஆசிரியரும் ஆகிய திரு. கி. வீரமணி அவர்களின் கட்டுரை வீரமணியாரின் இருளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே அமைந்திருந்தது.

திசம்பர் திங்கள் 29-ஆம் நாள் அவர் திட்டமிட்டிருந்த அனைத்துச் சாதியரும் 'அர்ச்சக'ராகலாம் — எனும் உரிமைக் கோரிக்கைக்கான போராட்டத்தில் உள்ள நயன்மையை வெளிப் படுத்துவதற்காக அக் கட்டுரையை எழுதியிருந்தார்.

கோயில்களில் பார்ப்பனர்கள்மட்டுமே பூசாரிகளாக இருக்க முடியும், கோயில் கருவறைக்குள் பார்ப்பனர்கள் மட்டுமே நுழைய முடியும் என்கிற இந்தியப் பார்ப்பனிய நெறிமுறைகளை மறுத்து அனைத்துச் சாதியர்க்குமே அந்த உரிமை வேண்டும் என்பதான கோரிக்கை சரியானது மட்டுமல்லாமல் மிகவும் தேவையானதும் ஆகும்.

இருப்பினும் அந்த உரிமைக்கான கோரிக்கை எவ்வகையானது என்பதிலும், அக் கோரிக்கைக்கான போராட்டம் எந்தத் தன்மையினதாக வீரமணி அவர்களால் முன்வைக்கப் பெற்றது என்பதிலுமே அவரின் பார்ப்பனிய நடைமுறை வெளிப்படுகிறது.

"அனைத்துச் சாதியரும் பூசாரிகளாக ஆவதானால் அவர்கள் 'வேத ஆகம'ங்கள் தெரிந்தவர்களாக இருக்க முடியாது. அவ்வாறு தெரியாதவர்கள் கோயில் கருவறைக்குள் நுழைவதும், பூசாரிகளாவதும் சரியில்லை" — என்பதாகப் பார்ப்பனர்கள் மறுத்ததாகவும், அதைச் சட்ட அளவில் ஏற்றுக் கொண்ட தில்லி மீமிசை வழக்குமன்றம் அனைத்துச் சாதியரும் பூசாரிகளாக்கப்பட வேண்டும் எனும் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டதாகவும் வீரமணி அக்கட்டுரையில் விளக்கி இருக்கிறார்.

இக் காரணத்தாலேயே மேனாள் முதலமைச்சர் செயலலிதாவிடம் தாம் இதுகுறித்துக் கோரிக்கை விடுத்த வகையில் கோயில் பூசைத் தொழிலில் அனைத்துச் சாதியரும் பூசாரிகளாவதற்கான பயிற்சிக் கல்லூரிகளாக வேத ஆகமக் கல்லூரிகளை அமைப்பது என்று அன்றைய செயலலிதா அரசு ஒப்புக் கொண்டு நடைமுறைப் படுத்த முயன்றதும், பின்னர் இப்போது ஆண்டு கொண்டிருக்கிற கருணாநிதி அரசு அதைத் தொடரவில்லை என்பதும் வீரமணி அவர்களின் போராட்டத்திற்கான காரணங்களாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



இதில் அனைத்துச் சாதியரும் பூசாரிகளாக்கப்பட வேண்டும் என்பதில் மட்டுமன்று, தமிழ்வழிபாட்டுரிமையிலும், தமிழ்வழிக் கல்வி உரிமையிலும் ஏன் தமிழ்நாட்டின் ஒவ்வொரு உரிமையிலும் இன்றைய தி.மு.க. அரசு எதையும் செய்யவும் இல்லை; செய்யப் போவதற்கான முனைப்பும் அவர்களிடம் இல்லை.என்பது வேறு செய்தி.

கோயில்களில் பூசையை இந்த இந்த 'வேத ஆகம' நெறிப்படி தான் செய்யவேண்டும் எனக் கூறுகையில், அந்த 'வேத ஆகம'க் கல்வியைப் பெற்று அனைத்துச் சாதியரும் பூசாரிகளாக மாறலாம் எனும் செய்தி எவ்வளவு இழிவானது என்பதும் அடிமைப் போக்கு கொண்டது என்பதும் வீரமணியாலும் அவரின் அடிப் பொடிகளாலும் உணரப்படவில்லையே என்பதே நம் வருத்தம்.

கடவுள் இருப்பது இல்லாதது என்பது எவ்வாறு அவரவரின் பகுத்தறிவு வளர்ச்சிக்குட்பட்டதோ, அவ்வாறே அதை வழிபடுவது வழி படாமல் விடுவது என்பதும் அவரவர் பகுத்தறிவுக்கு உட்பட்டதே ஆகும்.

ஆனால் அந்த வழிபாட்டை இந்தப் பார்ப்பனிய நெறிமுறைகளின்படி, 'வேத ஆகம'க் கருத்துகளின்படி தான் செய்ய வேண்டும் என்பதுதான் ஆரியப் பார்ப்பனியத்தின் நச்சுத்தனம்.

அந் நச்சுத்தனத்தை விளங்கிக் கொள்ளாமல், அனைத்துச் சாதியரும் வேத ஆகமங்களைப் படித்து கோயில் பூசாரிகளாக வேண்டும் என வீரமணி முன்வைக்கிற கோரிக்கைக்கும், தாழ்த்தப் பட்டவர் ஒருவருக்குப் பூணூல் அணிவித்துச் சாதிச் சமன்மை கண்டவராக பாரதியைக் குறிப்பிடுவதற்கும் வேறு பொருள்கள் இல்லை.

பூணூலை அணிவதன்வழி மட்டுமே பறையன் பார்ப்பனனாக முடியும் என்கிற ஆரிய நச்சுக் கருத்தே, வேத ஆகமங்களை அறிந்து கொள்வதன் வழி மட்டுமே ஒருவர் கோயில் 'அர்ச்சகராக' முடியும் என்கிற கோரிக்கையிலும் வெளிப்படுகிறது.

இந்த வேத ஆகமங்களுக்கான பயிற்சி அனைத்துச் சாதியர்க்கும் வேண்டும் என்பதாகவோ அதன்வழி அனைவரும் கோயில் கருவறையில் பூசைத் தொழில் செய்யலாம் என்பதோ பெரியாரின் கருத்தன்று. அது அனைத்தும் வீரமணியின் கருத்தே.

1969-ஆம் ஆண்டு கோயில் கருவறைக்குள் நுழைவுப் போராட்டம் (மூலஸ்தானப் பிரவேசக் கிளர்ச்சி) நடத்த அழைப்பு விடுத்த பெரியார் அவர்கள் கீழே குறிப்பிட்டவகையில் 'விடுதலை' இதழில் ஆசிரியவுரை எழுதியிருந்தார்.

"இந்தக் 'கர்ப்பக்கிரகம்' — என்கின்ற பூச்சாண்டிகள் பார்ப்பனரல்லாத மக்களை, இழிமக்களை, இழிபிறப்பாளர்கள் என்றாக்குவதற்காகத்தான் இருந்து வருகின்றனவே யல்லாமல், மற்றபடி

படிப்பகம்

www.padippakam.com



வேறு எந்தப் 'புனித'த் தன்மையையும் பாதுகாக்க அல்ல என்பதே நம் கருத்து. அன்றியும், நாம் உள்ளே சென்று வணங்குவதால் எந்தப் 'புனித'த் தன்மையும் கெட்டுவிடுவதில்லை; 'உள்ளே செல்லவேண்டும்' — என்கிற நமக்கும், நம் உறுதிக்கும், உண்மையில் எந்தப் 'புனித'த் தன்மையையும் கெடுக்க வேண்டும் என்கிற எண்ணம் இல்லவே இல்லை.

நமது இழிவு நீக்கப்படவேண்டும் என்கின்ற 'காரியத்திற்'காகவே இதைச் சொல்லுகிறோம்."

— என்று பெரியார் தெளிவுபடவே அறிவித்திருந்தார்.

அதற்காகப் போராட்ட அறிவிப்பையும் செய்தார். பெரியாரியப் தங்களை படுத்திக் வீரமணியார் கோயில் கருவறை போராட்டத்தை துணியாமல், மழுக்குகிற சட்டத்திற்குக் தளைப்படுத்தப் நேர மறைவுக் 'விடுதலை'யை உரிமைப் பிறங்கடை என்று அடையாளப் கொண்டுள்ள பெரியாரின் நுழைவுப் நடத்தத் அதையும் முனை வகையிலேயே கட்டுப்பட்டு, பட்டால் மாலை குள்ளான எதிர்பார்த்து போராட்டத்தையே திசைதிருப்புவதும், ஆரிய நச்சுத்தனமாக்குவதும் கண்டனத்திற்குரியது.

**அனைத்துச் சாதியரும் வேத ஆகமங்களைப் படித்து கோயில் பூசாரிகளாக வேண்டும் என வீரமணி முன்வைக்கிற கோரிக்கைக்கும், தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்குப் பூணூல் அணிவித்துச் சாதிச் சமன்மை கண்டவராக பாரதியைக் குறிப்பிடுவதற்கும் வேறு பொருள்கள் இல்லை**

இவை யாவற்றுக்கும் மேலாக வீரமணி அவர்கள் அவிழ்த்து விட்டிருக்கிற இன்னொரு 'பொய்ச்சரடு' தான் மிகவும் வேடிக்கையானது.

குமுக உரிமைக்கான வகையில் வீரமணி அவர்கள் அறிவித்திருக்கிற இத்தகைய போராட்டங்கள் நடைபெறுமானால் தமிழ்நாடு விடுதலை என்பதே தேவையில்லை — என்பதாகவும், அதற்குப் பெரியார் ஒரு மாநாட்டில் பேசிய பேச்சைச் சான்று காட்டித் தினமணிக் கட்டுரையை நிறைவு செய்திருக்கிறார் வீரமணி.

அரசியல், குமுகவியல், பொருளியல் வழிப்பட்ட அனைத்து வகையிலும் சிறிதும் தன்னளவில் எந்த உரிமையும் அற்று இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்புக்கும், அமெரிக்க பிற வல்லரசுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிற தமிழர்களின் அடிப்படை உரிமை என்பதே தமிழக விடுதலை என்பதில் தமிழர் மீதான அக்கறையுள்ள எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அத்தகைய விடுதலையைப் பெற்றெடுப்பதற்கு இங்குள்ள தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



இயக்கங்கள், புரட்சி இயக்கங்களுக்குத் திறன் இருக்கிறதோ இல்லையோ என்பது வேறு செய்தி.

ஆனால், அந்த விடுதலை தேவை என்பது அப்பழுக்கற்ற கருத்தாகவே இன்றுவரை நம் அனைவர் முன்னும் கடமையாக இருக்கிறது.

விடுதலை நாளிதழின் முகப்பில் 'தமிழ்நாடு தமிழருக்கே' எனும் வரிகளைத் தூக்கி எறிந்தவகையில் வீரமணியாருக்கு வேண்டுமானால் தமிழ்நாட்டின் விடுதலை விளங்காமல் இருக்கலாம், ஆனால் அதன் தேவையை அவர் மறுத்துவிட்டதாகக் கொள்ள முடியாது.

தமிழ்நாட்டு விடுதலையைக் கைவிடுவதற்குத் தன்னளவில் துணிவில்லாமல்தான் வீரமணி அவர்கள் பெரியாரை வேறு சான்றுக்கு அழைத்து அவரையும் கொச்சைப்படுத்துகிறார்.

> ''வெள்ளையன் சென்றவுடன் தமிழ்நாடு தனிநாடாக ஆகியிருக்குமேயானால், முதலாவது தமிழனின் குமுக இழிவு ஒழிந்திருக்கும்.
>
> இரண்டாவது, தமிழன் பகுத்தறிவின் உயர் நிலையை அடைந்து, இன்றுள்ள காட்டு விலங்காண்டித் தன்மையில் தன் தாய்நாட்டில் இழிபிறவி மாந்தனாக—கீழ்ச் சாதியாக— வயிற்றுப் பிழைப்புக்கு, பதவிக்கு எதையும் விற்றுப் பிழைக்கும் இழிதன்மை பெருமளவு மறைந்திருக்கும்; பதவிக்காக வடநாட்டானுடையவும், பார்ப்பானுடையவும் பெருவிரலைச் சூப்பும் இழிவுத்தனம் ஒழிந்திருக்கும்''

—என்று பெரியார் மிகக் கடுமையாகக் கூறியதோடு, தம் இயலாமையையும் அதில் புலப்படுத்துகிறார்.

அத்தகைய பொறுப்புள்ள பேச்சுகளைக் கருத்தில் கொள்ளாமல், விடுதலை உணர்வு மட்டுமின்றி, குமுகப் பொறுப்புணர்வும் இல்லாமல் வீரமணி பேசியிருக்கிறார். இது 'தமிழர் 'தளபதி' என்று பறைசாற்றப்படும் கோமாளித்தனத்தையே காட்டுகிறது.

பெரியாரின்(கொள்கைத்) திடலிலிருக்கும் ஒவ்வொன்றாக ஆரியப் பார்ப்பனியத்திற்கு விற்று முடித்தபின், இறுதியாக விற்றுக் கணக்குத் தீர்த்ததில் உள்ள நயன்மையை எழுதத் தொடங்கி யிருக்கிறார் வீரமணி.

இனி அவருக்குத் தேவை இரண்டே இரண்டுதான். ஒன்று குடுமியும், மற்றது பூணூலும். இனி குடுமியாய் அவர் முடி வளர வாய்ப்பில்லை. எனவே பூணூலையாவது மாட்டிக் கொண்டு பார்ப்பனிய அளவில் தூய்மை பெறலாம்.

இதைச் சொல்லுகிறபோது, பாவலரேறு ஐயா அவர்கள் பெரியார் மறைவுக்கு முன்னர் எழுதிய ஆசிரியவுரையே நினைவுக்கு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



தற்செயலாக அக்கால் கடலூர் வந்திருந்த பெரியார் அவர்களிடமே அந்த ஆசிரியவுரையைப் படித்துக் காட்ட வைத்திருக்கிறார் நம் பாவலரேறு ஐயா அவர்கள்.

அதைப் படித்துக் காட்டிய பின்னர், "எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும், சென்னை சென்றவுடன் தமிழக விடுதலைக் கான போராட்டத்தை அறிவிப்பேன்"—என்று பெரியார் அவர்கள் சொன்னதாகப் பாவலரேறு ஐயா அவர்கள் எழுதி யுள்ளார்கள்.

**'பெரியாரும் பிரிவினையும்'** என்கிற தலைப்பில் பெரியார் அவர்களுக்கு மடல் போல் பாவலரேறு ஐயா அவர்கள் எழுதிய ஆசிரியவுரையின் அந்த வரிகள் இவைதாம்.

**''ஐயா வாழ்வின் இறுதிப் படிக்கட்டுகளில் நின்று கொண்டிருக்கின்றீர்கள். இன்றுவரை உங்கள் கொள்கைகளையே அழுத்தந் திருத்தமாகப் பேசிப் பேசியே — எழுதி எழுதியே — நரை, திரை, முதுமை, இயலாமை, நோய்மை முதலிய அத்தனை முத்திரைகளையும் பரிசாகப் பெற்றுவிட்டீர்கள். இனி, இந்த நிலைக்கு அடுத்த நிலை என்னென்பதும் உங்கட்குத் தெரியும்?**

**உங்களுக்கு ஒரே நோக்கந்தான். அதிலிருந்து நீங்கள் என்று மாறுபட்டதில்லை. பின் ஏன், இவர்களுக்கு இவர்களின் நன்மை தீமைகளுக்காக, உங்கள் உயிரின் ஏக்கத்தை அடைத்துக் கொண்டு, "நான் பிரிவினை கேட்கவில்லை" என்று மழுப்பிப் பேசவேண்டும்? அதனால் என்ன நன்மை வந்துவிடும் என்று நீங்கள் கருதுகிறீர்கள். அப்படிச் சொல்வது ஒருவகை அரசியல் தந்திரமென்று நீங்கள் கருதலாம். இனிமேலும் எதற்கு உங்களுக்குத் தந்திர மந்திர மெல்லாம்? இவற்றையெல்லாம் அறவே விட்டுவிட்டு, ஒரு நொடி எண்ணிப் பாருங்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் அனைவரும் உங்கள் 'பிரிவினை'யைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றார்களே தவிர, 'நாட்டுப் பிரிவினை' பற்றியோ மக்கள் விடுதலை பற்றியோ அவர்கள் கவலைப்படுவதாக எங்களுக்குத் தெரியவில்லை.......**

**இறுதியாகச் சொல்லுகிறோம்.....**

**"நான் பிரிவினைதான் கேட்கின்றேன். தமிழ்நாடு தனியாகப் பிரிந்துதான் ஆகவேண்டும்"—என்று கொட்டை எழுத்துகளில் விடுதலையில் ஓர் அறிக்கை விட்டுவிட்டு, ஒரு போராட்ட நாளைக் குறியுங்கள். அப் போராட்டம் எதுவாகவும் இருக்கலாம். அதைப் பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். விளைவு நீங்கள் சிறையில்! உங்கள் முடிவு சிறையில்! உங்களைத் தொடர்ந்து உண்மையான செயல்மறவர்கள் எத்தனைப்பேர் பின்தொடர்ந்து வருகின்றனர் என்பதை இந்திராகாந்தி எண்ணிக் கொள்ளட்டும்! இந்த நாடு எண்ணிக் கொள்ளட்டும்!!..... எப்படியும் இன்றன்று.... இன்னும் நூறாண்டுகள் கழித்தேனும் தமிழகம் மொழியால், இனத்தால், நிலத்தால் விடுதலை பெறுவது உறுதி! உறுதி!! உறுதி!!!".**

❑

படிப்பகம்

www.padippakam.com

தொடர் - 4

# திருக்குறள் மெய்ப்பொருளுரை

## இரண்டாம் தொகுதி

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

'தெரிந்து செயல் வகை' என்னும் அதிகாரத்துள் வரும்,

'நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை' – 469

என்னும் குறளில், "ஒருவர் பண்பை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் செய்யும் நல்ல செயல்களின் வழியும் தவறு உண்டாகும்" என்று இதே கருத்தை வேறுவகையில் கூறுவார். 'அஃதாவது உதவி செய்வது இதில் கூறுப்பெறுகிறது. அங்கு நல்லது செய்வது பற்றிக் கூறுப்பெறுகிறது. ஒருவர்க்கு நல்லது செய்வதும் உதவி செய்வது போலத்தான். எனவே உதவி யாருக்குச் செய்தால் நல்லது விளையும், யாருக்குச் செய்தால் சிறிது நல்லது, அல்லது தீமை விளையும் என்று எண்ணிப் பார்த்துச் செய்தல்வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது அவரது பண்பையும் பார்க்க வேண்டும்' என்பார். நல்ல சால்புடையார் என்பதில் நல்ல பண்பும், அறிவுத்தகுதியும் அடங்கும் அன்றோ?

— இனி, **'வலியறிதல்'** அதிகாரத்துள் வரும்,

'ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி' – 477

என்னும் குறளுள், "ஒருவர்க்கு எதற்குக் கொடுக்கிறோம், ஏன் கொடுக்கப்படல் வேண்டும், எவ்வளவு கொடுத்தால் போதும் என்றவாறான முறையில் அளவிட்டறிந்து ஈவதுதான் அஃதாவது உதவுவதுதான், பொருளினது பயனைப் போற்றியவாறு வழங்குகின்ற முறையாகும்" என்னும் கருத்தையும் ஏறத்தாழ இதே நோக்கில்தான் கூறுவார்.

— இனி, அடுத்து, **'சுற்றந்தழால்'** என்னும் அதிகாரத்தின்கண் வரும்,

'பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்' – 528

என்னும் குறளுள், 'அரசன் தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் அனைவரையும் ஒரே தரத்தினராகப் பொதுவாக நோக்காமல் அவரவர் தகுதி வரிசையில் நோக்கி, அவரைப் பேணிக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளுவானாயின், அதன் பொருட்டாகவே அவர்கள் நிறைவடைந்து அவனை விட்டு விலகாமல் அவனுக்குத் துணையாக அவனுடனேயே இருந்து வாழ்வர்' என்னும் கருத்தைக் கூறுவதிலும் இக்குறளினது அடிச்சுவட்டைக் காணலாகும்.

— மொத்தத்தில் நூலாசிரியர் கருத்து யாதாமெனில், பொருளாலும், செயலாலும் அல்லது வேறு எந்த வகையினாலும் ஒருவர் மற்றவர்க்கு உதவி செய்யும் பொழுது, அதைப் பெற்றுக் கொள்பவரின் தகுதி, திறன், குணநலன்கள் முதலிய சால்புத் தன்மைகளைக் கருத்தில் கொண்டே உதவுதல் வேண்டும் என்பதும், அப்பொழுதுதான் அவ்வுதவி சிறப்புக்கும் பெருமைக்கும் உரியதாகும்' என்பதே என்க.

— மற்றவகையில் இதில் உதவி பெற்றுக் கொண்டவர் உதவி செய்தவர்க்குக் கைம்மாறாகத் தம் தகுதிப்பாடுகளுக்கேற்பத் திருப்பி உதவ வேண்டும் என்னும் கருத்துக்கு இடமில்லை என்று கூறி விடுக்க.

3. இவ் விரண்டு குறள்களாலும் உதவியைப் பெற்றுக் கொள்பவர் எத்தகையவராக இருத்தல் வேண்டும் என்பதை உதவி செய்ப வர்க்கு உணர்த்தினார் என்க.

4. இனி, உதவி செய்யப்பட்டார் சால்புடையவராக இருப்பின், அவரை உணர்ந்து அவர்க்கு உதவியைச் செய்பவரும் ஒரு வகையில் சால்பு(பண்பு) உடையவராகவே இருத்தல் வேண்டும் என்னும் ஒரு குறிப்பும் இதில் உண்டு என்பதை உணர்ந்து மகிழலாம்.

5. மிகக் குறைந்த சொற்களைத் தக்க முறையில் பயன்படுத்தி மிகச் சிறந்த கருத்தை உணர்த்தும் குறள்களுள் இதுவும் ஒன்றாகி ஆசிரியரின் கூர்மையான சொல்லாற்றலையும் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்திற்று என்க.

— இதனுள் பயன்படுத்தப் பெற்ற எட்டுச் சொற்களுள், 'உதவி' என்னும் சொல் மும்முறையும், வரைத்து என்னும் சொல் இருமுறையும் வந்து எண்ணிக்கையில் மூன்றைக் குறைத்து உதவி, வரைத்து, அன்று, செயப்பட்டார், சால்பின் ஆகிய ஐந்து சொற்களால் ஆக்கப் பெற்ற குறுங்குறட்பா விது என்று எண்ணி மகிழ்க.

— இத்தகைய பிற ஆங்காங்குச் சுட்டப்பெறும்.

தொடரும்...

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மாதங்கள்

புலவர் இறைக்குருவனார்

'தமிழ் மாதங்கள்' என்று 'சித்திரை' முதல் 'பங்குனி' ஈறான பன்னிருமாதப் பெயர்கள் இக்காலத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

மாதங்கள் பற்றிய காலக் கணக்கீடு தமிழருடையதே யாயினும் இப் பங்குனி ஈறான பன்னிரு மாதப் பெயர்களும் தமிழ்ச் சொற்களல்ல, பிரபவ, விபவ முதலான ஆண்டுப் பெயர்கள் அறுபதும் போல இவைதாமும் வடமொழிப் பெயர்களே!

இப் பன்னிரு மாதப் பெயர்களும் பன்னிரு விண்மீன் பெயர்களொடு தொடர்புடையனவாகும்.

ஆகவே, மாதங்களைப் பற்றி அறியுமுன் அவற்றிற்கு அடிப்படையான சிலவற்றைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

வானப் பெருவெளியில் கோள்களும் விண்மீன்களும் ஒரு நீள்வட்டப் பாதையில் முறையாகச் சுழன்று கொண்டிருக்கின்றன.

விண்மீன்கள் எண்ணற்றன வாயினும், அவை இருபத்தேழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒரு விண்மீன் என்று நாம் கருதுவது அல்லது குறிப்பிடுவது உண்மையில் ஒரு விண்மீன் குழுவேயாகும்.

இவ்விருபத்தேழு நாண்மீன்களும் அவற்றின் தோற்றத்தைக் கொண்டு ஒப்புமையாற் பெயர் பெற்றிக்கின்றன. குதிரை போன்று காட்சியளிப்பது புரவி என்றும், அடுப்புப் போன்ற தோற்றமுடையது அடுப்பு என்றும் இவ்வாறே பிறவும் பெயர் பெற்றன. புரவி 'அஸ்வதி' என்றும், அடுப்பு 'பரணி' என்றும் வடசொல் வழக்குப் பெற்றுள்ளன. பிறவும் இத்தகையனவே.

வான வெளியில் கிழக்குமேற்காக அமைந்த நீள்வட்ட மண்டிலம் முந்நூற்றறுபது சிறுபிரிவுகளாகவும், முப்பது பாகைகள் கொண்ட பன்னிரு பெரும் பிரிவுகளாகவும் பகுக்கப்பட்டுள்ளன. இவையே ஓரைகள் எனப்படுகின்றன.

இப் பன்னிரு ஓரைகளிலும் இருபத்தேழு விண்மீன்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இரண்டேகால் விண்மீன்கள் இடம் பெறுகின்றன. ஓரைகள் கோள்வீடுகள் (இராசி)கள் என்றும் குறிப்பிடப் படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஓரைகள் சேர்ந்த நீள்வட்டத்தை ஓரைவட்டம் எனலாம். இவ் வோரைவட்டப் பாதை கதிரவனை நிலவுகம் சுற்றும் வட்டப்பாதைய்யவிட மேலும் கீழும் தனித்தனியே ஒன்பது பாகையளவு சாய்ந்துள்ளது.

கதிரவன் வானமண்டிலத்தைச் சுற்றி வரும் கால அளவைப் பன்னிரண்டு பிரிவாக்கியுள்ளமையால் அவை ஒவ்வொன்றிலும் கதிரவன் இடம் பெறுவது நோக்கிப் பன்னிரு மாதங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

கதிரவன் ஒவ்வோர் ஓரையிலும் இடம்பெறும் கால அளவே ஒரு மாதம் ஆகும். இம் மாதங்கள் தனித் தனிச் சில நாழிகை ஏறத்தாழ, இருப்பத்தொன்பது முதல் முப்பத்திரண்டு நாட்கள் வரையுள்ள கால அளவாம். இந்த அளவு எக்காலத்தும் ஒரே நிலையாக இருக்கும்.

ஆகவே ஓரைகளின் பெயர்களையொட்டியே மாதங்களின் பெயர்களும் அமைந்தன.

கதிரவனும் நீள்வட்டப் பாதையும் நிலையானவை. நிலவுலகம் கதிரவனைச் சுற்றிவரும்போது கதிரவனை நோக்கி அதன் பின்புறம் மறையும் ஓரையை நாம் அம் மாதமாகக் குறிக்கிறோம்.

ஓரைகள், அவற்றின் தோற்றத்தைப் பொறுத்து ஒப்புமை வகையில் பெயர்பெற்றிருக்கின்றன.

ஆடு, காளை, இருவர், நண்டு, அரிமா, கன்னி, நிறைகோல், தேள், வில், சுறா, குடம், மீன் ஆகிய வற்றினைப் போன்ற வடிவ அமைப்புடைமையால் ஓரைகள் முறையே மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என்று பெயர் பெற்றன.

இப்பன்னிரு ஓரைகளும் மாதத்திற்கு ஒன்றாகக் கதிரவன்பின் மறைந்து கால வேறுபாட்டைக் காட்டுகின்றன. அன்றாடம் காலையில் கதிர்வன் தோன்றுவதற்கு முன்னும், மாலையில் கதிரவன் மறைந்த பின்னும் முதன் முதலில் வானில் தோன்றும் விண்மீன் கூட்டமே அன்று பகலில் கதிரவன் பின்னால் மறைந்த விண்மீன் கூட்டமாகும். இதைக் கொண்டே அம் மாதத்தின் பெயர் அமைகின்றது.

இதையே இன்னொரு வகையாகவும் சொல்லலாம். கதிரவன் இருக்கும் ஓரையிலிருந்து ஏழாவது ஓரையை யொட்டி நிலவுலகம் இருக்கிறது. கதிரவன் மேழ ஓரையில் இருந்தால் நிலவுலகிற்கு நெருக்கமாக இருப்பது துலாம் ஓரையாகும் கதிரவன் விடை வீட்டில் இருந்தால் நிலவுகம் நளியோரையினை நெருங்கியிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



ஓரை ஒவ்வொன்றிலும் இரண்டே கால் நாண் மீன்கள் இடம் பெறுகின்றமையால் நிலவுலகிற்கு அருகில் இருக்கும் ஓரையில் உள்ள இரண்டே கால் விண்மீனில் முதலில் இடம் பெற்றுள்ள விண்மீன் பெயரைக் கொண்டு அம்மாதம் பெயர் பெறுகின்றது. அதனைப் பிற்காணும் பட்டியலால் அறியலாம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசுவதி | 1 | | சித்திரை | ½ | |
| பரணி | 1 | ஐப்பசி | சுவாதி | 1 | சித்திரை |
| கார்த்திகை | ¼ | | விசாகம் | ¾ | |
| | 2¼ | | | 2¼ | |
| கார்த்திகை | ¾ | | விசாகம் | ¼ | |
| உரோகிணி | 1 | கார்த்திகை | அனுடம் | 1 | வைகாசி |
| மிருகசீரிடம் | ½ | | கேட்டை | 1 | |
| | 2¼ | | | 2¼ | |
| மிருகசீரிடம் | ½ | | மூலம் | 1 | |
| திருவாதிரை | 1 | மார்கழி | பூராடம் | 1 | ஆனி |
| புனர்பூசம் | ¾ | | உத்திராடம் | ¼ | |
| | 2¼ | | | 2¼ | |
| புனர்பூசம் | ¼ | | உத்திராடம் | ¾ | |
| பூசம் | 1 | தை | திருவோணம் | 1 | ஆடி. |
| ஆயிலியம் | 1 | | அவிட்டம் | ½ | |
| | 2¼ | | | 2¼ | |
| மகம் | 1 | | அவிட்டம் | ½ | |
| பூரம் | 1 | மாசி | சதயம் | 1 | ஆவணி |
| உத்திரம் | ¼ | | பூரட்டாதி | ¾ | |
| | 2¼ | | | 2¼ | |
| உத்திரம் | ¾ | | பூரட்டாதி | ¼ | |
| அத்தம் | 1 | பங்குனி | உத்திரட்டாதி | 1 | புரட்டாசி |
| சித்திரை | ½ | | ரேவதி | 1 | |
| | 2¼ | | | 2¼ | |

மேற்கண்டவாறு கதிரவன் மேழ ஓரையில் இருக்கும் போது அதிலிருந்து ஏழாவது ஓரையாகிய துலாம் ஓரையில் நிலவுலகம் இருப்பதால் துலாத்திற் குரிய முதல் விண்மீன் அறுவை (சித்திரை) யாதலால் அம்மாதம் சித்திரை மாதம் எஸஸன்று பெயர் பெற்றது. இவ்வாறே பிறவும் கண்டு கொள்க!

### விண்மீன் பெயர் மாதங்கள்

சித்திரை முதலிய மாதங்களின் பெயர்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது அறிதற் பாற்று.

படிப்பகம்

www.padippakam.com



சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவதி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், மகம், உத்திரம் என்னும் பன்னிரு விண்மீன்களின் பெயர் களின் தொடிசு (தந்திதாந்தப் பெயர்களாகவே சித்திரை முதலிய பன்னிரு மாதப்பெயர்களும் அமைந்துள்ளன.

இப்பெயர்களும் பிறவிண்மீன்களின் பெயர்களும் அவற்றின் தோற்றத்தைப் பொறுத்து ஒப்புமை வகையில் அமைந்துள்ளன. இவை முறையே அறுவை, முறம், குருகு, கடைக்குளம், காக்கை, நாழி, குதிரை, ஆரல், மான்தலை, காற்குடம், கொடுநுகம், உத்திரம் என்னும் பொருளுடையன வாகக் குறிக்கப்பட்டுள்ளன.

சித்திரை

சித்திரை என்னும் விண்மீன் பெயரால் சைத்திரம் - சித்திரை என்னும் மாதப் பெயர் அமைந்துள்ளது.

வைகாசி

விசாகம் என்னும் விண்மீன் பெயர் விசாகி என்றும் வைசாகி என்னும் திரிந்து, வைசாகி - வைகாசி என முன் பின்னாக மாறியுள்ளது.

ஆனி

மூலம் என்னும் விண்மீன் பெயர் மூலன் என்று திரிந்து, அதன் பிற்பகுதியே நீண்டும் இகரம் சேர்ந்தும் ஆனி என்று ஆகியுள்ளது.

ஆடி

உத்திராடம் என்னும் விண்மீன் பெயரால் அமைந்ததே ஆடி. அப்பெயரின் பிற்பகுதியிலுள்ள ஆட என்பதினின்றே ஆடி வந்துள்ளது.

ஆவணி

ஆவணிக்குக் கரணியமானது அவிட்டம் என்னும் விண்மீன். அப்பெயரின் முற்பகுதி நீண்டும் திரிந்தும் ஆவணியாகியுள்ளது.

புரட்டாசி

விண்மீன் பெயர்களுள் ஒன்றான பூரட்டாதி என்பது தலை குறுகியும் இறுதியிலுள்ள தி-சியாகத் திரிந்தும் புரட்டாசியாக வழக்குப்பெற்றுள்ளது.

ஐப்பசி

அசுவதி (அஸ்வதி) என்னும் விண்மீன் பெயரின் முதலிலுள்ள அகரம் ஐகாரமாகியும், பிறதிரிபுகளைப் பெற்றும் ஐப்பசியாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



**கார்த்திகை**

கார்த்திகை (கிருத்திகா) என்னும் விண்மீன் பெயரே, சித்திரை என்றாற்போலக் கார்த்திகை என மாதப்பெயராகவும் உள்ளது.

**மார்கழி**

மிருக சீரிஷ என்னும் விண்மீன் பெயரே மூற்பகுதி மிரு-மார் எனவும் ஈற்றெழுத்து ஷ-ஷி என்றும் திரிந்து, ஷி-ழியாகி மார்கழி என வழங்கி வருகின்றது.

**தை**

புனர்பூசம், பூசம் என்னும் விண்மீன் பெயர்கள் புனர்தை, தை, என்றிருத்தல் வேண்டும் என்றும் வரிசையில் அவை முன்பின்னாக இடம் மாறியுள்ளன என்றும் கணியர் இ.மு. சுப்பிரமணியனார் கூறுகிறார். புனர்தை என்பதிலுள்ள தையே மாதப் பெயராக விளங்குகின்றது.

**மாசி**

மக(ம்) என்னும் விண்மீன் பெயர் மகசி என்றாகித் தலை நீண்டும் இடை குறைந்தும் மாசி என்று மாதப் பெயரர்கியுள்ளது.

**பங்குனி**

உத்திரவிண்மீனுக்குப் பல்குணா எனும் பிறிதொரு பெயரும் இருப்பதாகத் தெரிகிறது. பல்குணா என் பதினின்றே பங்குனி என்னும் மாதப்பெயர் திரிந்த மைந்துள்ளது.

இவ்வாறு அமைந்துள்ள மாதப் பெயர்கள் வரிவடிவம் ஒலி வடிவம் என்னும் இருவடிவிலும் வடவெழுத்து ஒரீஇத் தமிழ் எழுத்தால் அமைந்திருப் பதாலும், பன்னூறு ஆண்டுகளாகப் புலமக்களால் மட்டுமன்றிப் பொதுமக்களிடையிலும் வழக்கூன்றியிருப் பதாலும் இவையெல்லாம் தமிழ்ச் சொற்கள் என்று பலர் கருதுகின்றனர். ஆனால் அவை நீண்டகாலமாக தமிழில் புகுந்து வழங்கிவரும் வடசொற்களே என்பது ஒருதலை.

இவ்வாறு சித்திரை, வைகாசி முதலிய பன்னிரு மாதப் பெயர்களுக்கும் அடிப்படையான சித்திரை, விசாகம் முதலிய பன்னிரு விண்மீன் பெயர்களும் வட மொழிச் சொற்களாக இருத்தலால் அவற்றைத் தமிழ்ப் படுத்த வேண்டுமாயின் அச்சித்திரை, விசாகம் முதலிய விண்மீன் பெயர்களுக்கு நேரிய தமிழ்ப் பெயர்களான அறுவை, முறம் முதலியவற்றின் அடிப்படையில் புதியன வாகப் படைத்தல் வேண்டும்.

-தொடரும்

படிப்பகம்

www.padippakam.com

# இவர்தாம் பாவாணர்..!

பாவலரேறு
பெருஞ்சித்திரனார்



பளபளப்பான கருத்த முகம்; ஒளி நிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக்கழுத்து; பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் — இவற்றின் மொத்த உருவம் பாவாணர். பாவாணர் எனில் மொழியியல் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஒருவரே.

தமிழ்மொழி ஆய்விலேயே ஐம்பதாண்டுகள் மூழ்கித் திளைத்த இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இந்நாள் வரை கண்டதே இல்லை. இவர் வாயினின்று சரமாரியாக வந்து விழும் தனித் தமிழ் ஆராய்ச்சிக் கருத்துகளை இதுவரை எந்த அறிஞரும் தமிழ் மொழிக்கு வழங்கி விடவில்லை. தமிழ்த்துறைக்கு அவர் தொண்டு புதியது; தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன. அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டு மொத்த முயற்சிக்குப் 'பாவாணர்' என்றே பெயரிடலாம்.

அவர் கருத்துகள், முறிக்கப்பட்ட தமிழனின் முதுகெலும்பைத் தூக்கி நிறுத்தும் வல்லமை வாய்ந்தன; தூங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பும் வீறு நிரம்பியன; மங்கிக் கிடக்கும் தமிழ் மொழியின் செம்மாப்பினை உலகமெலாம் பறை சாற்றும் ஆற்றல் நிறைந்தன; மொழியாராய்ச்சி என்னவென்றே அறியாமற் கிடந்த தமிழனுக்கு மொழியுணர்வூட்டி, அதன்வழிப் பண்டைய வரலாறுணர்த்தி எழுச்சி பெறச் செய்வன. அவர் பேச்சும் எழுத்தும் தமிழரின் ஒவ்வொரு செவியிலும் அறிவிலும்பட்டு எதிரொலித்தல் வேண்டும். அப்பொழுது தான் தமிழன் தன்னுணர்வு பெறுவான்; தன்மானங் கொள்வான்; தன்னறிவுணர்வான்; மொழிப்புலங் காணாது வழிப்புலந் தப்பிய தமிழனுக்கு அவர் ஊட்டும் விழிப்புணர்வும், அதினின்றெழும் ஒவ்வோர் ஆய்வு முடிவும் தமிழர்க்கு என்றென்றைக்கும், ஒளிகாட்டி நிற்கும் என்பதில் ஐயமேயில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால், வெற்றாரவாரச்ச சொற்புகழ்ச்சியும் விளம்பரப் போலிமையும் இக்காலத்துக் கற்றாரிடத்தும் நிரம்பி வழியும் கரணியத்தால், மெய்ம்மைக்கும் பொய்ம் மைக்கும் வேறுபாடு காண்பது மிகமிக அரிதாக உள்ளது. அல்லாட்டம் நடைபெற்றுவரும் அரசியல் சூழ்ச்சிகளாலும், அறியாமையாலும், வறுமையாலும் பிற கல்வித் துறைகளின் மேம்பாடுகள் அனைத்தையும் எடுத்துக்கூறவும் ஆளின்றிச் சீந்துவாரற்றுக் கிடக்கும் தற்காலத் தமிழகத்தில் ஏன் பிறந்தோம் என்று அறிஞர் அலமந்து கிடக்கின்றனர். அறிவியலும் வாழ்வியலும் மேனாட்டாரை எந்த அளவிற்கு ஆட்கொண்டனவோ அந்த அளவிற்குத் தமிழகத்தை அறியாமையும் மூட நம்பிக்கையும் ஆட்கொண்டுள்ளன. இவ்விருள்சேர் இருநிலையும் ஒருசேரப் பெருகிக் கிடக்கும் இந்நாட்டில் போலிமையும் புன்மையுமே தலைதூக்கி நிற்கின்றன; அதிகாரம் பெறுகின்றன; எனவே உண்மை வலிவற்றுப் போகின்றது. இந்நிலையில் பாவாணரைப் போன்ற பேரறிஞர்களை நாடு இனங்கண்டு கொள்வது குதிரைக் கொம்பே!

தமிழகத்தின் தவக்குறையென்று நாம் எல்லோருமே சொல்லிக் கொள்கின்ற அறிஞரைப் பேணாத குறை தமிழ் நாட்டு மண்ணிலோ, மரங்களிலோ விளைவதன்று. அப்படிச் சொல்லியே தப்பித்துக் கொள்ளும் நம் ஒவ்வொருவருடைய மனத்திலும் விளைவது தான். அது வெறுங் குறையாக மட்டும் நின்றுவிடவில்லை; தமிழக வரலாற்றிலேயே என்றென்றைக்கும் துடைத்தெறியப்படாத கறையாகவே படர்ந்திருக்கின்றது. இதனை நம்மில் எல்லாரும் திருப்பித் திருப்பி ஒருவர் முகத்தில் ஒருவர் பூசிக்கொள்கின்றாமே யன்றி, இதனைப் போக்குகின்ற முயற்சியை நம்மில் எவரும் எக்காலத்தும் இன்று வரை செய்யவில்லை. காரணம் நமக் கிருக்கும் பகட்டான பேச்சுதான்; பார்ப்போரை மயங்க வைக்கும் நடிப்பு தான்; நமக்கேற்பட்ட அரசியல் திளைப்பு தான்; அறிவை அறிந்து கொள்ள மறுக்கின்ற அறியாமைச் செருக்குதான்; மொத்தத்தில் நம் உடலில் ஊறிக் கிடக்கும் இருண்ட வாழ்க்கையின் ஈடுபாடுதான். இந்நிலைகள் இந்தத் தலைமுறையிலேயே அடியோடு தொலைக்கப்பட்டாலன்றி, இனி, அடுத்த தலைமுறையிலிருந்து தமிழக மண்ணில் அறிஞர்களே தோன்ற மாட்டார்கள் என்பது திருக்குறள் போன்ற உண்மை; தொல்காப்பியம் போன்ற உறுதி; பாவேந்தர் பாடல்கள் போன்ற தெளிவு!

தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர்திருத்தக்காரர்களும் எத்தனையோ காரணங்களைத் தம் தம்

படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றறிவிற்கேற்பக் கூறினாலும் உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச் சரிவு; இரண்டு தமிழனின் மொழிச் சரிவு. இவ்விரண்டு சரிவுகளும் ஆரியப் பார்ப்பனர்கள் என்று இத் தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ அன்றே தொடங்கின. இச் சரிவுக்குத் தடுப்புச் சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால் ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும் இந் நாட்டிலுள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன் பட்டன. முதற்சரிவைக் கண்டு காட்டியவர் பெரியார் ஈ.வே.இரா. இரண்டாம் சரிவைக் கண்டு காட்டியவர் மறைமலையடிகளார்.

ஈ.வே.இரா. வின் குமுகாய முயற்சி மலையத்துணை யென்றாலும், அதனால் இதுவரை ஏற்பட்டிருக்கின்ற பயன் ஒரு குன்றத் துணையே! அடிகளாரின் மொழி முயற்சி கடலத்துணை. யென்றாலும், அதனால் ஏற்பட்ட பயன் ஒரு கால்வாய் அத்துணையே. இவர்கள் செய்த இவ்வளவு அரும் பெரும் முயற்சிகளும் இப்படிப் பயனிற் குன்றி யமைக்கு நம்மிடம் உள்ள பக்தவத்சல சுப்பிரமணியன்களும், வையாபுரித் தெ. பொ. மீ-க்களுமே கரணியம் ஆவர். இத்தகையோரின் உள்ளரிப்புகளால் பெரியாரின் குமுகாயத் தொண்டு அடி பருத்து நுனி சிறுத்துப் போனது; அடிகளாரின் மொழித் தொண்டு அடியகன்று இடை குறுகிப் போனது. இக்கால் இவ்விரு தொண்டு முயற்சிகளும் இளைஞர் தலைமுறையினரின் தோள்களைத் தாவிப் பற்றிக் கொண்டுள்ளன. இத் தலைமுறையில் இவற்றில் வெற்றியைத் தேடிக் கண்டானானால் தமிழன் ஆரியத் தினின்று பிழைத்தான்; இல்லெனில் ஆரியத்திற்கே பிழைத்தான்!

பெரியாரின் குமுகாயப் போராட்டம் புறந்தெரிவது, அடிகளாரின் மொழியியற் போராட்டம் அகமொடுங்கியது. அடிகளாருக்குப்பின் இப்போராட்டம் இருளுள் புகைபோல் ஒளி மழுங்கியது. பாவாணரின் விடாமுயற்சியோ, அதனை மீண்டும் புகையுள் தீப்போல் ஒளி சேர்த்தது.

பாவாணர்க்கு இக்கால் அகவை எழுபத்தேழு முடிந்து, எழுபத்தெட்டு தொடங்குகின்றது. 7—2—1902-இல் நெல்லை மாவட்டத்தில் உள்ள சங்கரநயினார் கோவிலில் பிறந்து, கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டிலேயே தம் முழுப் பொழுதையும் செலவிட்டு வரும் இம் மொழியியல் மூதறிஞர் இன்றுகாறும் தமக்கென ஓர் இடத்தையோ, ஒரு வீட்டையோ கூட

படிப்பகம்

www.padippakam.com



உடைமையாக்கிக் கொள்ளாமல், சென்னையில் குடிக்கூலிக்கு ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வருகின்றார் எனில், இத்தமிழகம் அறிஞர்களைப் புறக்கணிக்கின்றது என்று கூறுவதா? அல்லது இதில் உள்ள மக்கள் அறிவைப் புறக்கணிக்கின்றார்கள் என்று கூறுவதா?

கருத்துகளைத் தம் அதிகாரிகளுக்கும், அரசியற் சாய் காலுக்கும் ஏற்ப வளைத்துக் கொள்ளும் வையாபுரி, தெ.பொ.மீ. போன்ற சிலரின் திறனையோ, அல்லது கழக நூற் காட்சிகளைக் கற்பனை நூல்களாக்கி விற்பனை செய்து பொருள் குவிக்கும் பேராசிரியர் சிலரின் போக்கையோ, அல்லது எவரைக் கொண்டோ எழுதுவித்துத் தம் பெயரைப் பொறித்து வெளியிட்டுக் கொள்ள இசைவு தந்து, அதற்கீடாகப் பெரும் பொருள் பெற்றுக் கொள்ளும் நூலாசிரியர்கள் சிலரின் கள்ள வாணிக அமைப்பையோ பாவாணர் கற்றிருந்தால் அல்லது கைக் கொண்டிருந்தால், இவரும் தமக்கென வீடுகளும் மலைத்தோட்டங்களும் தெருவுக்குத் தெரு, மலைக்கு மலை வாங்கிப் போட்டுக் கொண்டு இயங்கியில் ஊர்ந்து கொண்டு திரியலாம். ஆனால், தன்மானத் திறவுகோலைக் கொண்டுதான் அறிவுப் பூட்டைத் திறக்க முடியும் என்ற கண்ட மொழி வரலாற்றுப் பேராசிரியராகிய இவர் இத்தகைய போலித் தன்மைகளைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

இவர் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்ப்பது தமிழ்; கொண்டது தமிழ்; கொடுப்பது தமிழ்; விண்டது தமிழ்; விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும், தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப்பெற்ற தமிழின் முழுவுருவம் பாவாணர் என்னின் வியப்படைய வும் வேண்டா; மிகையென்று கருதிவிடவும் வேண்டா. இக் கட்டுரையை எழுதும் இந்தக் கையும், அதை ஆட்டுவிக்கும் இந்த மனமும் எளிதே எழுதிவிடாத சொற்கள் இவை. கோடிப் பொன் கொட்டிக் கொடுத்தாலும் "இவர் தமிழின் மொத்த உருவம்" என்னும் நான்கு சொற்களை இக் கையினிடத்திலிருந்து தகுதியுள்ளவர் தவிர வேறு எவரும் எழுதி வாங்கிவிட முடியாது. "தமிழின் ஏற்றத்தைப்பற்றி எவ்வளவும் உரையுங்கள்: ஆனால் ஆரியத்தை — வட மொழியைப் பற்றி எந்தக் கருத்தையும் கூறாமலிருங்கள்" என்று இவருக்குப் பல்கலைக்கழக அதிகாரிகள் அறிவுறுத்தி யும் கூட, "அப்படி என் கருத்தை இருட்டடிப்புச் செய்து கொண்டு நான் மானத்தோடு உயிர் வாழ முடியாது" என்று மறுப்புரை கூறி, நடுவணரசு கொடுக்க முன்வந்த இலவயத் தொகையையும், பல்கலைக்கழகம் கொடுத்துக் கொண்டிருந்த ஊதியத் தொகையையும் ஒருங்கே இழந்த இந்தப் பெரும் பேராசிரியரைப் போல் வேறொரு பேராசிரியரை, தமிழ்

படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றிலேயே காண முடியாது. தாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டிவரும் என்று அறிந்திருந்தும், "எனக்கு வறுமை உண்டு; மனைவி மக்களும் உண்டு; அதோடு கொஞ்சம் மானமும் உண்டு" என்று உரைத்த இவர் பெருமிதத்தை என்னென்பது! வறுமையிற் செம்மையை என்னென்றெழுதுவது? காற் காசுக்குத் தமிழைக் காட்டிக் கொடுக்கும் கயவர் மலிந்த இந்நிலத்துப் பாவாணர் தப்பிப் பிறந்த ஒரு தமிழ்ப்பிறவி!

இவரின் அளப்பரிய தமிழாற்றலை முழுவதும் தமிழகம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவர் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்தைந்து. இன்னும் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இவரால் எழுதப் பட வேண்டியிருக்கின்றன. அவை அத்தனை நூற்களும் தமிழ் மொழிக்கு ஏற்றம் உரைப்பன. வீழ்ந்துபட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. இவர் எழுதவிருக்கும் செந்தமிழ்ச் சொற் பிறப்பியலகரமுதலி இவர் ஒருவராலேயே எழுத வியலும் அரும்பெரும் நூல் ஆகும். பல்கலைக்கழகக் காசுகளைக் கைநிறைய வாங்கிக் கணக்கிட்டுக் கொண்டு இன்று தமிழகத்தில் உள்ள அத்தனைப் பேராசிரியர்களும் ஒன்று சேர்ந்தாலும் எழுதவியலாத அவ்வகர முதலி தமிழுக்கே அழியாத சொத்தாகும்; தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக்காக்கும் அரிய ஒளிஞாயிறாகும். எத்தனை எத்தனை வகைகளுக்கோ தமிழ் என்னும் பெயரால் இன்று பெருந்தொகை பல்கலைக் கழகங்களாலும் அரசாலும் செலவிடப்பெற்று வருகின்றது. இப்பெருந் தொகையுள் ஒரு சிறு அளவு தொகையை இவர் முயற்சிக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும், அஃது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியை மீட்க வல்லது. மறைமலையடிகளால் தோற்றுவிக்கப் பெற்று, இவரால் பேணிக் காக்கப்பெறும் தனித்தமிழியக்கம் செழிப் படைய அடையத் தான் தமிழ்மொழி துலக்கமுற்று விளங்கும். அப்பொழுது தான் தமிழ் அறிவியல் மொழி யாகவும் வாழ்வியல் மொழியாகவும் வளம் பெறும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்மொழி இலக்கணப் புலமையும், சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், உருது, இந்தி, ஆங்கிலம் முதலிய வடமொழி இலக்கணப் புலமையும் ஒருங்கே கைவரப்பெற்ற மொழி யியல் ஞாயிறான இவர் தமிழகத்தை விளங்கிக் கொண்டுள்ள அளவுக்குத் தமிழகம் இவரை விளங்கிக் கொள்ளுமானால் — பயன்படுத்திக் கொள்ளுமானால் தமிழுக்கு என்றும் அழிவில்லை; தமிழினத்துக்கும் வீழ்ச்சியில்லை; இவர் தலைமையில் அந்த நல்ல நாளை நோக்கி நாம் நடையிடுவோமாக.

**— தென்மொழி, சுவடி : 8, ஓலை : 5-6, 1970**

படிப்பகம்

www.padippakam.com

# விண்வெளியிலிருந்து விழும் பேரிடி!

—'நயிபூய்' பன்னீர்—

(விண்வெளியில் இருந்து இந்த உலகில் விழும் பேரிடிகள் அறிவியல் கதைகளுக்குப் பல பத்தாண்டுகளாகக் கருப்பொருளாக இருந்துள்ளன. ஆனால் இப்பொழுது வானியலார்(Astronomers) பலர் அதுசார்பான அச்சுறுத்தலை எதிர்கொள்ள முனைப்பான முயற்சியை மேற்கொண்டுள்ளனர். பண்டைக் காலத்தில் இந்த உலகில் வாழ்ந்த 'தைனோசர்' என்னும் மாபெரும் விலங்குகள் ஒரே ஒரு விண்கல் தாக்குதலால் அழிவுற்றமைபோல் நம்முடைய நிலையும் ஆகுமா?)

'1997XF11' என்று பெயரிடப்பெற்ற குறுங்கோள்(Astroid) ஒன்று 1998 மார்ச்சு மாதத்தில் நம் நிலவுலகின்மீது பெரும்பாலும் மோதும் போக்கில் இருந்தது என்று அறிவியலார் கண்டுபிடித்தனர். இது கடவுள் 'அருள்மொழி' என்று தலைப்புச் செய்தியாக உலக முழுமையும் உள்ள செய்தித் தாள்களில் வெளிவந்து எல்லோர் ஆவலையும் தூண்டியது. சில மணி நேரத்திற்குப் பின் கூடுதல் கோளப் பாதை குறிப்புப்படி சரிபார்க்கப்பட்ட கணிப்பு முறைகளின் படி கடைசியாக ஒரு செய்தி கிடைத்தது. அதன்படி 2 அ.மா. (கி.மீ.) அகலம் உள்ள அந்த பாறைத் தொகுப்பு அத்தோபர் 2028-இல் இந்த உலகத்திற்கு ஏறத்தாழ பத்து இலக்கம் அ.மா. தொலைவில் இதைக் கடந்து செல்லும் என்பதை அறிய முடிந்தது.

அந்தக் குறுங்கோளை அறிவியலார் எதிர்பாராத நிலையில் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அப்படிப்பட்ட பொருளுக்காக வான்முகட்டை ஆராயும் ஒரு குழு அதைக் கண்டுபிடித்தது. அது ஆரிசோனா பல்கலைக் கழக விண்வெளி கண்காணிப்புத் திட்டத்தில் ஒருபகுதியாக விளங்குகிறது. அப்படிப்பட்ட தாக்குதல்களின் விளைவுகளால் கடந்த கால நிலவுலக உயிர்கள் அழிந்தன. அதைப் போலவே மீண்டும் அழிவு நேர்வதற்கான ஏராளமான சான்றுகள் இப்பொழுது அவர்களுக்குக் கிடைத்துள்ளன. அதனால் இந்த ஆய்வினை அவர்கள் செய்து வருகின்றனர்.

குரோவ் கில்பட்டு(Grove Gilbert) என்னும் அமெரிக்க நிலவியலார்(Geologist) முதன்முதலில் நிலவின் பரப்பில் எரிமீன் வீழ்குழிகள் இப்படிப்பட்ட தாக்குதல் விளைவின் வடிவங்களாய் (Impact Features) உள்ளன என்று 1890-இல் ஒரு கொள்கையை வகுத்தார். ஆனால் அவை நிலவில் எரிமலை இருந்ததற்கான அடையாளங்கள் என்ற எதிர்மறைக் கருத்துக் கொண்டவர்கள் 1960-இலும் இருந்தனர். 'அப்பலோ விண்வெளித் தொடர் ஆய்வினர்' தெளிவான ஒளிப் படங்கள், நிலநடுக்க மதிப்பீடு, நிலவுப்

படிப்பகம்

www.padippakam.com



பாறைகளின் மாதிரிகள் ஆகியவற்றைக் கொண்டு இந்தச் சிக்கலில் தீர்வு கண்டனர்.

நிலவின் மேற்பரப்பு வழவழப்புப் பகுதிகளிலிருந்து கொண்டு வந்த கதிரியக்கக் காலம்காட்டும் மாதிரிகளில் இருந்து(Radioactive Dating of Samples) அவை உருகிய பாறைகளில் இருந்து 380 கோடி ஆண்டுகளுக்குமுன் அமைந்தவை எனத் தெரிகிறது. எரிமலைகளின் வாய்களைச் சுற்றிலும் பாதி அளவுக்கு மூடப்பட்டிருக்கும் நிலவின் மேட்டு நிலங்களின் இப்பொழுதைய தோற்றம் 400 கோடி ஆண்டுகளுக்குமுன் அதன்மீது கடைசியாக நடந்த தாக்குதல்களின் போது அமைந்ததாகும். அப்பொழுது கதிரவ மண்டலம் அமைந்து 50 கோடி ஆண்டுகள்தாம் ஆயின. அப்பொழுதுவரையில் நிலவின் மீது தொடர்ந்து நடந்த தாக்குதல்கள் மிகவும் குறைந்த அளவில் இருந்தன. 100 அ.மா. குறுக்களவுள்ள ஒரு வட்டத்தை நாம் நிலவின் மீது எங்கேனும் ஓரிடத்தில் வரைந்தால், அதில் குறைந்த அளவு ஒவ்வொன்றும் ஓர்(அ.மா.)கி.மீ. குறுக்களவு கொண்ட சராசரி 50 எரிமீன் வீழ்குழிகளைக் காணலாம். அவை கடந்த 60 கோடி(600 Million) ஆண்டுகளில் – அதாவது நிலவுலகக் கடல்களில் உயிர்களின் பலவகைப் பிரிவுகள் ஏற்பட்ட அந்த இடைக் காலத்தில் — தோன்றியவை.

நில்வும் நிலவுலகும் ஒன்றுக்கொன்று நெருங்கி இருப்பதால் கடந்த சில பத்துக் கோடி ஆண்டுகளில் நிலவில் மோதிய பொருள்களுக்கு இணையான எண்ணிக்கையில் நிலவுலகின் மீதும் பொருள்கள் மோதியிருக்க வேண்டும் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. அறிவன்(புதன்), வெள்ளி, செவ்வாய் ஆகியவற்றின் ஆய்வு கதிரவ உள் மண்டலக் குழப்பத்தைக் காட்டிற்று. சேணளவி மூலம் உலகின் பரப்பை அதன் கோளப் பாதையில் இருந்து வரைபடம் எடுத்தனர். அதில் நிலத்தின் மேலுள்ள எரிமீன் ‘வீழ்குழிகள்’ அரிப்புக்கு உள்ளாகியும், நிலைத் திணை வகைகளால் மூடப்பட்டும் உள்ளதால் தெளிவாகத் தெரியவில்லை.

சேதத்தை விளைவிக்கும் விண்கற்கள் எங்கிருந்து வருகின்றன? கதிரவ மண்டல அமைப்பின்போது மீதமாக விடப்பட்டவை சில; மற்றவை இப்படிப்பட்ட கோள்களுக்கு இடையில் நிகழும் மோதல்களில் ஏற்படும் சிதைவுகள். தொடக்கக் காலக் கதிரவனைச் சுற்றிக் காரியின் வளையத்தை ஒத்த, ஆனால் அதைவிடப் பெரிய அளவிலான ஏதோ ஒரு மூலப் பொருளின் தூசியில் ஆன வட்டத் தகட்டில் இருந்து(Dusty Disc) கோள்கள் அமைந்தன என்று வானியலார் நீண்ட காலமாகவே எண்ணிக் கொண்டிருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



விண்மீன்கள் குழுவில் இரண்டாவதாக உள்ள 'பெட்டா பிட்டோரிசு'(Beta Pictoris) என்னும் அண்மையில் தோன்றிய — தூசித் தட்டில் புதைந்துள்ள — விண்மீனைப் போன்ற பொருள்களைப பற்றி மேற்கொண்ட ஆய்வுகளால் இந்தக் கருத்தில் அவர்கள் நம்பிக்கை மேலும் உயர்ந்தது. நம் கதிரவ மண்டலத்தை விடப் பல மடங்கு பெரிய ஓர் அண்டப் பகுதியின் குறுக்காக அந்த விண்மீனின் இரண்டு பக்கங்களும் நீண்டிருக்கின்றன.

கதிரவ மண்டலம் அமையக் கரணியமான வளிமமும் தூசியும் கொண்ட முகில் தகர்ந்து அதிக அடர்த்தி ஆனதால் அதில் இருந்த சின்னஞ் சிறிய தூசித் துகள்கள் ஒன்றோ டொன்று மோதத் தொடங்கி ஒன்றாக ஒட்டிக் கொண்டன. கதிரவன் தானே அமைந்தபொழுது சில குறுமாத்திரி(மி.மீ.) குறுக்களவு கொண்ட பருப்பொருள்(Matter) தொகுப்புகள் இன்றைய நிலையை அடையும் வரையில் இந்த நடைமுறை மிக நீண்ட காலம் நிகழ்ந்தது. சிதைந்த முகில்களின் கோணிய மோதல் விசையால்(Angular Momentum) இந்தச் சின்னஞ் சிறிய தொடக்கச் சில்லுகள்(Primordial Pebbles) ஒரு தட்டாக இறுகின. முகில் சிதையும் முன்பு அதில் ஏற்பட்ட சிறிதளவு சுழற்சிகூட கதிரவன் உருவமையும் நேரத்தில் மிக விரைவான சுழற்சியாக ஆனது. கடுஞ் சிக்கலான இந்த நிகழ்ச்சியில் இளங் கதிரவனைச் சுற்றி இருந்த எல்லா சின்னஞ் சிறிய தொடக்கச் சில்லுகளும் ஒரே திசையில் நகர்ந்து கொண்டு இருந்தன. அதனால் அவற்றை உடைத்துத் தகர்க்கும் நேருக்கு நேர் மோதல்கள் குறைவாக நிகழ்ந்தன.

அவை ஒரு அ.மா.(கி.மீ.) குறுக்கள வுள்ளனவாக வளர்ந்த பிறகு தனித்த பொருள்களுக்குரிய ஈர்ப்பாற்றல் அவற்றிற்குத் தேவைப் பட்டது. அந்த நிலையில் அவை ஒன்றோடொன்று மோதிக் கொண்டன; செயலெதிர்ச் செயல் புரிந்தன; பெரிய திரளாக ஆயின. மிகப் பெரிய திரள்கள் அதிக வலுவான ஈர்ப்பாற்றல் விசையுடன், அவை கோள்களாகவும் குறுங் கோள்களாகவும் (Moons) அமையும் வரையில் சிறிய திரள்களைக் கவர்ந்து ஈர்த்தன. பிறகு கோள் அமைப்பின் கடைசிக் கட்டத்தில் இருந்த தொடக்க நிலைக் கோள்களும் துணைக் கோள்களும் மீதம் இருந்த சிதைவுகள் ஊடே விண்வெளியில் தங்களுக்குத் தெளிவான பாதைகளை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

கோள் கட்டமைப்பு நடவடிக்கைகளில் இருந்து ஏராளமான வானுலகச் சிதைவுகள்(Cosmic Debris) விண்வெளியில் எச்சமாக விடப்பட்டிருக்க வேண்டும் என்பது கோள்கள் உருவாக்கத்தில்

படிப்பகம்

www.padippakam.com



இருந்து விளங்கிக் கொள்வது இன்றியமையாத தொன்றாகும். கதிரவனுக்கு அருகில் நான்கு சிறிய பாறையால் ஆன கோள்களும் (செவ்வாய் அறிவன்(புதன்) வெள்ளி, நிலவுலகம்) அவற்றிற்கு அப்பால் வளிமங்களால் ஆன நான்கு கோள்களும் அமைந்துள்ளன. நிலவுலக அமைப்பை ஒத்த கோள்களுக்கும் மிக அதிகப் பேராற்றல் வாய்ந்த வளிமக் கோள்களுக்கும் இடையில் குறுங்கோள் மண்டலம் (Astroid Belt) எனப் பெறும் வானுலகக் கோள்கள் இடிபாடுகளின் (Rubbles) ஒரு பிணைப்பு உள்ளது. அவை கோள்கள் உருவாக்கத்திலிருந்து விடப்பட்ட எச்ச மிச்சப் பொருள்களால் ஆனவை. அந்தச் சிதைவுகள் ஒன்றோடொன்று இணைந்து ஒன்றாகத் திரள முடியாது. ஏனெனில் கதிரவ மண்டலத்திலேயே மிகப் பெரிய கோளான வியாழனின் ஈர்ப்பாற்றல் அவற்றிற்குத் தடையாக உள்ளது. ஆனால் கதிரவ ஆழி வட்டத்தில கதிரவனைச் சுற்றி உட்புறக் கோள்களாக அமையவிருந்த நான்கு முதன்மையான திரள்கள்(Lumps) அமைந்த பிறகுங்கூட இன்னும் பல சிறிய பருப் பொருள்கள் அதைச் சுற்றி வந்தன. கோளப் பாதையில் சுற்றிவந்த அவற்றை முதிர்ந்த கோள்கள் அழித்தன. உட்புறக் கோள்கள் எல்லாம் அவற்றின் தொடக்கக் காலத்தில் மற்ற பருப் பொருள்களால் கடுமையாகத் தாக்கப்பட்டவைதாம். இப்படிப்பட்ட தாக்குதல்களில் சில ஐம்பது கோடி ஆண்டு இடைக் காலத்தில் நிகழ்ந்தன. நிலவுங்கூட குறைந்த அளவு செவ்வாயைப் போன்ற ஒரு பெரிய பருப் பொருளின் மோதலால் நிலவுலகினின்றும் பிளந்தகன்றது.

*1946*-இல் இரால்பு பால்டுவின்(Ralph Baldwin), தான் வில்ஃகெல்ம்(Don Wilhelm) என்னும் அமெரிக்க நிலவியலாளர்கள் இருவர் கோள்களின் தாக்குதல் விளைவைப் பற்றிய கருத்தொன்றை அறிவித்தனர். அதை அப்பொழுது அறிவியலார்கள் புறக்கணித்தனர். *1975*-இல் புதிய கொள்கையுடன் புதுக் கருத்து வளர்ந்தது. அதை வில்லியம் ஆர்டுமான்(William Aartmann) தோனால்டு தேவிசு (Donald Davis) என்னும் அமெரிக்க வானியலார் இருவர் அறிவித்தனர்.

ஒரு பாறையிலிருந்து சிறுதுண்டு ஒன்றைச் செதுக்கி எடுப்பதற்கு இணையான ஒன்றைப் போன்றது இது என்று எண்ணுவது தவறு. இந்தக் கொள்கைக்கு வானியலார் பயன்படுத்தும் பேச்சு வழக்குச் சொல் — அப்படிப்பட்ட மோதலில் என்ன நடக்கிறது என்று கணினி (Computer) தரும் விளக்கமான உருப்போலிகள்(Simulations) அடிப்படையில் — "பெரிய மோதற் சிதறுதல்" என்பதாகும்.

செவ்வாய் அளவுள்ள பருப்பொருள் ஒன்று நிலவுலகத்தோடு மோதியதால் நிலவுலகில் ஆயிரம் அ.மா. ஆழமுள்ள உருகிய

படிப்பகம்

www.padippakam.com



பாறைப்பெருங்கடல் உண்டானது. அதற்குத் தேவைப்பட்ட அளவு அதிக வெப்பமும் உண்டானது. அதில் வெளியிலிருந்து வந்து மோதிய பருப்பொருள் முழுமையாய் அழிவுற்றது.

மோதிய அந்தப் பருப்பொருளின் உள்ளே இருந்த அடர்ந்த மாழைப் பொருளை (Metalic Material) நிலவுலகு கவர்ந்து கொண்டது. நிலவுலகில் ஏற்கெனவே இருந்த உள்ளிடத்து இரும்போடு கொஞ்சங் கொஞ்சமாகத் தணிந்த உலகின் மேற்பரப்பு அடுக்குகளின் வழியே அது உட்சென்று கலந்தது. உள்நோக்கி வந்து மோதிய குறுங்கோளின் அடர்த்தியற்ற பருப்பொருள் பகுதிகள் அந்தத் தொடக்கக் கால நிலவுலக மேல்ஓட்டுப் பகுதிகளோடு சிவந்த வெப்பச் சாம்பற் கட்டிகளாகவும் உருகிய பாறைக் கோளங்களாகவும் வெந்தழல் வீசியவாறு விண்வெளியில் சிதறிப் பறந்தன.

மோதலில் ஏற்பட்ட வெப்பச் சிதைவுகள் நிலவுலகைச் சுற்றிலும் ஒரு வளையமாக அமைந்தன. அவற்றில் இருந்த தண்ணீர் போன்ற அடர்த்தியற்ற பொருள்கள் ஆவியாயின. பிறகு அந்தச் சிதைவுத் துண்டுகள் எல்லாம் குளிர்ந்து படிப்படியாக நிலவாக(Moon) அமைவதற்கு ஒன்றாக ஒட்டிக் கொண்டன.

மோதலின் தாக்க ஆற்றல் ஒரு கிளை விளைவாக நிலவுலகத்தை அதன் அச்சின்மீது நமக்கு அடுத்தடுத்து இரவு பகல் தோன்றுமாறு விரைவாகச் சுற்றச் செய்திருக்க வேண்டும். நிலவுலகின் நடுப் பகுதிக்கு அப்பால் அந்தக் குறுங்கோள் அதை மோதியதால் பருவ காலங்கள் மாறுவதற்கு வாய்ப்பாக அதன் அச்சில் சாய்வு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆகவே நானூறு கோடி ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய இன்றைய வாழ்க்கை நிலவு உண்டாவதற்குக் கரணியமான நிலவுலகில் ஏற்பட்ட தாக்குதல் விளைவால் அன்றே நெறிமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நிலவின் கூட்டுப் பொருள்களை ஆய்வு செய்தமையாலும், கணினி அளித்த அப்படிப்பட்ட உருப் போலிகைகளாலும் அதன் மீது தண்ணீரோ அல்லது எளிதில் ஆவியாகக் கூடிய பொருள்களோ இருப்பதற்கு வாய்ப்பில்லை. நிலவு எப்படி அமைந்தது என்பதற்கான இந்தப் போலிகை உரு(Model) இப்பொழுது இந்த முடிவை மிகத் தெளிவாக நிறுவியுள்ளது. அகக் கதிரவ மண்டலத்தில் இரும்பால் ஆன உள்ளிடம் இல்லாத ஒரே பாறை உலகமாக நிலவு அமைந்துள்ளது.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## தமிழீழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பு—கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டில் அமைதியாக வாழ்ந்துவந்த, தமிழீழத் தமிழர்களில் ஒருவரான திரு. ஈழவேந்தன் அவர்களை இந்திய அரசு திடுமென நாடு கடத்தியதை எதிர்த்துத் தமிழீழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பைச் சார்ந்த பல்வேறு இயக்கத்தினர் கடந்த நளி 30 அன்று(15.12.2000) அன்று சென்னை — நுங்கம்பாக்கம் சாத்திரிபவன் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தக் காவல் துறையினர் இசைவு மறுத்தபோதிலும் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தச் சென்ற திரு. பழ. நெடுமாறன், திரு. ஆனூர் செகதீசன், புலவர் இறைக்குருவனார், விடுதலை இராசேந்திரன், பாவலர் அறிவுமதி உள்ளிட்ட ஐந்நூற்றுக்கு மேற்பட்டோரைக் காவல் துறையினர் ஆங்காங்குத் தொலைவிலேயே வழிமறித்துத் தளைப் படுத்திச் சென்று சிறைவைத்தனர்; அன்றிரவே விடுவித்தனர்.

ஒருங்கிணைப்பின் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்களையும் உடனிருந்த அன்பர்களையும் முரட்டுத்தனமாகப் பிடித்து வலுக்கட்டாயமாக ஊர்தியிலேற்றி அவமதிப்பாக நடத்தியதைக் கண்டித்து தளைப்படுத்தப்பட்டோர் உண்ணாநோன்பு மேற்கொண்டனர்.

## சிறைகளிலும் உண்ணாநிலைப் போராட்டம்!

திரு. ஈழவேந்தனை நாடு கடத்தியதற்கும், திரு. பழ. நெடுமாறன் மீது காவலர் தாக்கியதையும் கண்டித்து கடந்த 17.12.2000 அன்று கோவை நடுவண் சிறையில் திரு. தமிழ்முகிலன், திரு. புகழேந்தி, சிறீகவி ஆகிய தோழர்கள் உண்ணாநிலைப் போராட்டம் செய்தனர். திருச்சி நடுவண் சிறையிலும் பத்து பேர்கள் இதே நாளில் உண்ணா நிலைப் போராட்டம் செய்தனர்.

## நாகல்கேணித் தமிழ்க் கழகம்(சங்கம்) — உண்ணாநோன்பு

சுறவ(தை) முதல் நாளே தமிழாண்டுப் பிறப்பு என்று அரசு அறிவிக்கக் கோரி பம்மல் நாகல்கேணித் தமிழ்க் கழகத்தின் சார்பில் கடந்த சிலை 1 அன்று (16.12.2000) பல்லாவரம் பேருந்து நிலையத்தின் அருகில்—மறைமலையடிகளார் பந்தலில் திரு. நா.வை. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் உண்ணாநோன்பு அறப்போர் நடைபெற்றது.

புலவர் கி.த. பச்சையப்பன், புலவர் சுந்தரராசன், பாவலர் இராமச்சந்திரன், அ.சி. சின்னப்பாத் தமிழர், திரு. தணிகைமைந்தன், திரு. உண்மைவிரும்பி, பாவலர் இளஞ்சித்திரன், திரு. இறை. பொற்கொடி, திரு. தமிழருவி உள்ளிட்ட நூற்றிருபது பேர் உண்ணா நோன்பு அறப் போரில் பங்கேற்றனர்.

தென்மொழி ஆசிரியர் திரு. தாமரையம்மையார், முனைவர் அரு. கோபாலன், புலவர் இறைக்குருவனார் முதலானோர் பலர் உரையாற்றினர். திரு. பழ. நெடுமாறன் நிறைவுரை யாற்றினார். திரு. நா. அருணாசலம் பழச்சாறு வழங்கி உண்ணா நோன்பை முடித்து வைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



**தலைநகர்த் தமிழ்க் கழகம்(சங்கம்) — கண்டன ஆர்ப்பாட்டம்:**

பள்ளிக்கு வேட்டியுடுத்திச் சென்றதற்காகவும், தமிழில் பாடக் குறிப்பு எழுதியதற்காகவும் தமிழாசிரியர்மீது நட வடிக்கை எடுத்துத் தண்டம் போட்டும், பணியினின்று நீக்கியும் உள்ள சென்னை தியாகராயர் நகர் வெங்கடேசப்பர் தகுதிநிலை(Matriculation) பள்ளி ஆள்வினையாளர்களின் தமிழெதிர்ப்புப் போக்கைக் கண்டித்து தலைநகர் தமிழ்க் கழகத்தின் சார்பில் கடந்த சிலை 5 அன்று (20.12.2000) புலவர் சாத்தன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அன்று (திச. 20) காலை 10 மணியளவில் வள்ளுவர் கோட்டத்தின் அருகிலிருந்து தமிழுணர்வாளர்கள் முழக்கமிட்டவாறு ஊர்வலமாகச் சென்று பள்ளியின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தோர் நூறு பேர் ஊர்வலத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தினிடையே புலவர் சாத்தன், புலவர் சுந்தரராசன், புலவர் இறைக்குருவனார், பாவலர் மு. இராமச்சந்திரன் உள்ளிட்ட குழுவினர் பள்ளிப் பொறுப்பாளர்களை நேரிற் கண்டு கண்டனத்தைத் தெரிவித்தனர். பள்ளி ஆளுமையர் அப்போதும் அதப்பாகவே நடந்துகொண்டது குறிப்பிடத் தக்கது.

புலவர் இறைக்குருவனார், புலவர் சுந்தரராசன் ஆகியோர் பள்ளியின் தமிழ்மொழி, பண்பாட்டு எதிர்ப்புப் போக்கை மக்களிடம் அம்பலப்படுத்திப் பெரும் போராட்டத்திற்கு முனைப்புற வேண்டும் என்றும் கூறினர்.

**'தென்மொழி' பொறுப்பாசிரியர் பங்கேற்பு.**
**மலேசியாவில் தமிழாண்டு மாநாடு:**

'சுறவ(தை) முதல் நாளே தமிழாண்டுத் தொடக்கம்' என்னும் உலகப் பரந்துரை மாநாடு தி.பி. 2031 சிலை 22 காரிக் கிழமை அன்று மலேசியா — கோலாலம்பூரில் நடைபெறுகின்றது.

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், தமிழ்நெறிக் கழகம், திராவிடர் கழக் ஆகிய அமைப்புகளின் சார்பில் பதினோரமைப்புகளின் ஒத்துழைப்போடு நடைபெறும் இம் மாநாட்டில் பன்னாட்டுத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்கள் இம் மாநாட்டிற் பங்கேற்க கடந்த சிலை 20 அன்று (4.1.2001) மலேசியாவிற்குச் சென்றுள்ளார். கல்பாக்கம் திரு. வேம்பையன் அவர்களும் உடன் சென்றுள்ளார்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகளை தமிழ்ப்புனல் மு. மணிவெள்ளையாளர் (மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம்), திரு. இரா. திருமாவளவன்(மலேசியத் தமிழ்நெறிக் கழகம்) உள்ளிட்ட செயற்குழுவினர் சிறப்புறச் செய்துள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

# தென்மொழி நாள்காட்டி




✳ பாவாணர் ஐயா - பாவலரேறு ஐயா ஆகியோரின் அரிய நிழற்படங்களுடன்.

✳ தி.பி. 2032-க்கான தென்மொழி நாள்காட்டி அணியமாகி விட்டது.

✳ நினைவுகூரத் தக்க நாள்வழிச் சிறப்பு நிகழ்ச்சிகள்,

விலை : உரு. 20.00

விற்பனையாளர்களுக்கு 10 விழுக்காடு கழிவு உண்டு.

தொடர்புகொள்ளுங்கள்:

அமைச்சர், **'தென்மொழி'**,
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
மேடவாக்கம், சென்னை - 601 302.
தொலைபேசி : 227 0231

படிப்பகம்

www.padippakam.com

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண். 8119/63 தென்மொழி
டி.என்.சீப். பி.எம்.சி. 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி


# மொழிஞாயிறு பாவாணரின் நூல்கள்

மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டையொட்டி, ஐயா அவர்களின் அறிவுக் கருவூலமான அரிய நூல்கள் அனைத்தும் செம்மையான பதிப்பாகப் பொலிவுடன் வெளிவருகின்றன.

## முன்பதிவுத் திட்டம்

மொத்த விலை : உரு. 3,000
முன்பதிவு விலை : உரு. 2,000

### மூன்று தவணைகளில்

1. உரு. 1000 — 15.1.2001-க்குள்
2. உரு. 500 — 12.02.2001-க்குள்
3. உரு. 500 — 15.03.2001-க்குள்

'தமிழ்மண் பதிப்பகம்'

(Thamizhman Pathippakam)

சென்னை - 600 014.

— என்ற பெயருக்குத் தொகையினை வைப்பக வரைவோலை அல்லது பணவிடையாகச்செலுத்தலாம்.

தொடர்பு கொள்ளுங்கள்:

**தமிழ்மண் பதிப்பகம்,**
அகமது வணிக வளாகம் 2-ஆம் தளம்,
293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 821 5684, 826 6637


தென்மொழி, சென்னை - 600 005

படிப்பகம்